விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 10 வெள்ளிக்கிழமை (24.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 188


# பொருளாதார மையம்

# சதிமுயற்சி அம்பலம்

## சூறையாடல்களை வெளிப்படுத்துகிறார் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திற்கு பொருளாதார மையமொன்றை தருவது போல் இதுவரை காலமும் கூறிவந்தவர்கள் தற்போது அதனை மதவாச்சியில் அமைக்க கேட்டு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் சதி முயற்சி அம்பலமாகியுள்ளதாக பகிரங்கமாக தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள மற்றும் கிடைக்க வேண்டிய பல திட்ட அமைவுகளை சூறையாட திரைமறைவில் பாரிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## ரயில் மோதி மாணவி பலி



(மிருசுவில்)

புகையிரதம் மோதியதில் மாணவி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் 23ஆம் பக்கம் பார்க்க....

## வடிரக வாகனம் மோதி பாடசாலை மாணவன் மரணம்



(யாழ்ப்பாணம்)

வடிரக வாகனத்தால் மோதுண்ட மாணவன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் யாழ்ப்பாணம் - கே.கே.எஸ் வீதி சிவன் கோவிலுக்கு முன்பாக இடம் பெற்றது. 23ஆம் பக்கம் பார்க்க....


## சி.எஸ்.டி முன்பள்ளிகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும்!

### வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உட்பட வன்னி மாவட்டங்களில் சி.எஸ்.டி இராணுவ அணி நடத்தும் முன்பள்ளிகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் என வடக்கு மாகாண சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 55ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் 24ஆம் பக்கம் பார்க்க....






கோப்புப் படம்

மன்னார் மடுத் திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழா நேற்று மாலை 6.15ற்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்துள்ளது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் ஓய்வு நிலை ஆயர் கிங்ஸிலி சுவாமிப்பிள்ளை கொடியினை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.




## வலி.வடக்கு பகுதியில் 201.3 ஏக்கர் காணி நாளை விடுவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப்பகுதியில் 201.3 ஏக்கர் காணி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராட்சி தலைமையில் நாளை சனிக்கிழமை விடுவிக்கப்படவுள்ளது. மேற்குறித்த காணி கையளிக் 23ஆம் பக்கம் பார்க்க....

## துஷ்பிரயோகங்களை தடுக்க விஷேட குழு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தற்போது அதிகரித்து வருகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் இணைந்த விசேட குழு ஒன்றை நியமிப்பதற்கு வடக்கு மாகாண சபை திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான பிரேரணை ஒன்றினையும் 23ஆம் பக்கம் பார்க்க....

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(அல்லைப்பிட்டி)

இலங்கை சட்டக் கல்லூரியின் இந்து மகா சபை மாணவர்களால் போதையற்ற சூழலில் சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் என்னும் தொனிப் பொருளில் இலவச சட்ட விழிப்புணர்வு கருத் தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து 11 மணிவரை அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், நாரந்தனை றோமன் கத் தோலிக்கப் பாடசாலை மற்றும் வேலணை பிரதேச செயலகத்திலும் பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 5 மணிவரை புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை நெடுந்தீவின் பல பகுதிகளிலும் நடை பெறவுள்ளது. (செ-11)

WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
(C-4991)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. பாலசிங்கம் ஜெகன்**
**– ஆசிரியர்**
(B.B.A, PGDE, M.ED 2nd Upper)

கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடமிருந்து இலங்கை அதிபர் தரம் III பரீட்சையில் சித்தியடைந்தமைக்கான நியமனத்தைப் பெற்ற கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு.பாலசிங்கம் ஜெகன் அவர்களை மனம் மகிழ வாழ்த்தி அவர் மேன்மேலும் பல பதவிகள் பெற வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

"அன்னதாரகை"
மாலுசந்தி, நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

வாழ்த்துவோர்கள் :
மாமா, மாமி,
மைத்துனர்கள், மைத்துனி

( இ-5008)

தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள
**தென்மராட்சி அபிவிருத்தி கழகம் (TDA)**
இணைந்து ஒகஸ்ட் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் நடத்தும்
தென்மராட்சி விழாவை ஒட்டிய

## மாபெரும் விளையாட்டுப் போட்டி

- **விளையாட்டுகள்**

1. மென் பந்துத் துடுப்பாட்டம் (ஆண்கள்)
2. வலைப்பந்து (பெண்கள்)
3. மரதன் (ஆண், பெண்)
4. சைக்கிள் ஓட்டம் (ஆண், பெண்)
5. தடகளம் (ஆண், பெண்)
(100m, 200m ஓட்டம், தட்டெறிதல், குண்டு போடுதல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், ஜவலின் எறிதல்)

- **ஒவ்வொரு விளையாட்டுக்கும் 50000 ரூபாய்க்கு மேற்பட்ட பரிசுகள்**

**பங்குபற்றுனர்**

1. தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட கழகங்கள், பாடசாலை மாணவர்கள் (அதிபரூடாக விண்ணப்பம்)
2. 17 தொடக்கம் 35 வயது வரையிலுள்ளவர்கள்

- விண்ணப்பம் இலவசம்
- விண்ணப்பம் முடியும் திகதி 2016.07.10
- விண்ணப்பிக்கும் போட்டியாளர்களுக்கு போட்டிகள் தொடர்பான விபரங்கள், விதிகள் வழங்கப்படும்.


**மேலதிக விபரங்களுக்கு**

செயலாளர் : 077 3164236, Email. BJTVMR@yahoo.com
இணைப்பாளர்கள் : 0776186554, Email. arunthan97@gmail.com

(சி-5003)

செயலாளர், தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னத்துரை சிவஞானம்

பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய சிவஞானம் சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தையாரின் இழப்பு பேரிழப்பாகும். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்; அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக பூமாவடி பூம்புகார் கண்ணகை அம்மன் பாதம் பணிந்து வேண்டுகின்றோம்.

**மண்டைதீவு பூமாவடி பூம்புகார்**
**கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினரும்,**
**மண்டைதீவு வாழ் மக்களும்.**

(சி-5009)

# மரண அறிவித்தல்



## தேவராசா நிறோஜ்

(யா/கொக்குவில் இந்து பாடசாலை பழைய மாணவன், யா/மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)

காளி கோவிலடி தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா நிறோஜ் நேற்று (23.06.2016) வியாழக் கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் தேவராசா - இந்திராணி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், கிரியானி, நிகேதனன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லையா பொன்னம்மா, மயில்வாகனம் செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2016) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
(ஆசாரி குடும்பத்தினர் )
தொ.பே : 077 179 7935

காளி கோவிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில். (5030)

# திருடர்கள் வரிசையில் கம்மன்பில வெட்கப்படும் ஜாதிக ஹெல உறுமய




பிவிதுரு ஹெல உறுமய வின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதயகம்மன்பில போன்ற திருடர்கள் ஜாதிக ஹெல உறுமயவில் கட்சி உறுப்பினர்களாக இருந்தமைக்கு வெட்கப்படுவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அத்துடன் உதயகம்மன்பில இதற்கு முதலிலும் சிறைத்தண்டனை அனுபவித்த நபர் எனவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 2000ஆம் ஆண்டுக்கு முன் உதயகம்மன்பில என்ற ஒரு அரசியல்வாதி இருப்பதே இலங்கை மக்களுக்கு தெரியவில்லை என்றும் ஜாதிக, ஹெல உறுமயவே அவரை இலங்கையின் அரசியல் வாதியாக அறிமுகப்படுத்தியது என்றும் ஹெல உறுமயவின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், உதய கம்மன்பில தொடர்பான வழக்கிற்கு சரியான தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில், இது வெளிநாட்டுப் பிரஜை தொடர்பான வழக்கு. எனவே குறித்த வழக்கிற்கான சரியான தீர்ப்பை பெற்றுக்கொடுக்குமாறு நீதிமன்றிடம் கேட்பதாகவும் ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையானது குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-5)




# அனைத்து அபிவிருத்திகளையும் ஐ.தே.க. அரசாங்கமே செய்தது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி இல்லை என்றால், நாடு முன்னோக்கி செல்லாது எனவும் நாடு முன்னோக்கி செல்ல வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஒன்று இருக்க வேண்டும் எனவும் நாட்டில் நடந்துள்ள அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமே செய்தது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நாட்டை மேலும் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமாயின் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியை சூழ இணைய வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

இணையத்தளம் வழியாக கட்சியின் அங்கத்துவத்தை பெறும் முறையை அறிமுகம் செய்யும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்தார். (இ-5)

# முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தவயோதிபர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் மயிலணி வடக்கை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான நாகரத்தினம் (வயது- 73) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 14 ஆம் திகதி சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு சென்ற இவர் மத வடியில் வீதியைகடப்பதற்கு முற்பட்டவேளை மல்லாகத்தில் இருந்து சுன்னாகம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் வயோதிபரை மோதியுள்ளது.

மயக்கமடைந்து விழுந்த வயோதிபரை தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையையாழ்போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-9)

# நீதிமன்றம் முன் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் உயிரிழப்பு

கடவத்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹர நீதிமன்ற வளாகத்தில்நேற்று இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளை நிற ஹைபிரிட் காரொன்றில் வந்த சிலர் அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் 35 வயதுடையவர் என்றும் ரத்மலான பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது. மேலும், நான்கு பேரை கொண்ட குழு மூலம் தாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்யப்பட்டுள்ள நபர் ஹெரோயின் சம்பந்தமான வழக்கு தொடர்பாகவே நீதிமன்றத்திற்கு வருகை தந்த நபர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# இந்து சம்மேளனப் பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு



(கொழும்பு)

அகில இலங்கை இந்து சம்மேளன பிரதிநிதிகள் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினர்.

அகில இலங்கை இந்து சம்மேளனத்தின் தலைவர் நா.அருண்காந்த், செயலாளர் வீ.முரளீதரன் ஆகியோருடன் சம்மேளனத்தின் மாவட்டங்களின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-5)

# ஆட்டோச் சாரதிகளுக்கு வைத்தியப் பரிசோதனை

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள ஆட்டோ சாரதிகளுக்கு எதிர்காலத்தில் முதலுதவிப் பயிற்சி வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துகளால் தினமும் 8 பேர் பலியாவதுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரில் அதிகளவானோர் ஆட்டோவில்கொண்டுவரப்படுவதால் முதலுதவி பயிற்சிகளை வழங்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-5)



# அநுர - சுமித் பிணை மறுப்பு



முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலையத்தின் முன்னாள் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரது பிணை கோரிக்கைகள் கொழும்பு மேலதிக நீதவானால் மறுக்கப்பட்டுள்ளது.

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் சர்ச்சைக்குரிய மரணம் தொடர்பில், சாட்சிகளை மறைக்க முற்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டு, இவர்கள் கைதுசெய்யப்பட்டு, தொடர்ந்தும் விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை சந்தேக நபர்களின் விளக்கமறியலை நீடித்து நேற்று நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-5)

# அவிசாவளையில் இரு இளைஞர் குழுக்களிடையே பாரிய மோதல்

## 6 பேர் படுகாயம்

(கொழும்பு)

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புவக்பிட்டிய பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற பாரிய மோதலில் அறுவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் அதிகாலை பெரும்பான்மை இன இளைஞர் குழுவொன்று தமிழ் இளைஞர்கள் மீது நடத்திய தாக்குதலிலேயே இந்த ஆறு பேரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் அறுவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் இருவர் அவிசாவளை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-5)

## இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறி

### மீள்பரீட்சை அறிவித்தல்

யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் பகுதி நேர மற்றும் முழுநேர டிப்ளோமா பயிற்சிநெறிக்கான கீழ்க்குறிப்பிடப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான மீள்பரீட்சைகள் எதிர்வரும் 11.07.2016 அன்று நடைபெறவுள்ளது.

பிரிவு III பகுதி நேரம் **(Batch iii Part Time (2010 / 2012)**

பிரிவு V முழு நேரம் **(Batch V Full Time (2012 / 2013)**

பிரிவு VI முழு நேரம் **(Batch VI Full Time (2013 / 2014)**

மீள்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் 06.07.2016 இற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்


பதிவாளர் : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


# மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(கோப்பாய்)

பலாலி வீதி ஊரெழு அம்மன் கோவிலுக்கு அண்மையாக இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பலாலி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் புன்னாலைக்கட்டுவன் நோக்கி யுவதி ஒருவர் பயணித்துக்கொண்டிருந்த வேளை ஊரெழு அம்மன் கோவிலுக்கு அண்மையாக உள்ள ஒழுங்கைக்குள் இருந்து நடந்து வந்த குடும்பஸ்தர் வீதியினை கடக்க முற்பட்டபோது மோட்டார்



சைக்கிளில் வந்த யுவதி மோதியதிலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யுவதியும் வீதியினை கடந்த குடும்பஸ்தரும் படுகாயங்களுக்குள்ளாகி நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் யுவதி செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளின் முன் பகுதியும் சேதமடைந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-87)


கிளி/அம்பிகை வித்தியாலயம். கண்ணகை நகர், புன்னைநீராவி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கணபதிப்பிள்ளை இராஜீஸ்வரன்

எமது பாடசாலை ஆசிரியர் திரு.கணபதிப்பிள்ளை இராஜீஸ்வரன் அவர்கள் 09.05.2016-ல் இருந்து அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றமையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மேலும் அவர் பல பதவிகள் பெற்று உயர்வடைய வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
கிளி/அம்பிகை வித்தியாலயம், கண்ணகிநகர்.


# 5 இந்.மீனவர்கள் விளக்கமறியலில்



(யாழ்ப்பாணம்)

இயந்திர பழுது காரணமாக தொண்டைமானாறு கடற்பரப்பில் கரையொதுங்கிய இந்திய மீனவர்கள் 5 பேரை எதிர்வரும் யூலை மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சிவகுமார் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

தொண்டைமானாறு கடற்பரப்பில் நேற்றைய தினம் மாலை 3 மணியளவில் கரையொதுங்கிய நாகை மாவட்டத்தை சேர்ந்த 5 மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தமது படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக கரையொதுங்கியதாக தமது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தனர்.

கடற்படையினர் இவர்களை கைது செய்து யாழ்.மாவட்ட கடற்கொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

இந் நிலையில் குறித்த மீனவர்களை நேற்றையதினம் இரவு பருத்தித்துறை நீதிமன்ற நீதவானின வாசஸ் தலத்தில் முற படுத்திய போது அவர்களை எதிர்வரும் யூலை மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்(செ-9)


## மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மொத்த விற்பனை

நெல்லியடி நகரின் பிரதான பஸ் நிலையத்திற்கு அருகேயுள்ள பிரபல மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தின் வாகன உதிரிப்பாகங்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு. மொத்த விலையில் 25% கழிவு வழங்கப்படும். தொடர்ந்தும் அதே இடத்தில் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தை நடாத்த விரும்பினாலும் அதற்கேற்ற ஒழுங்குகளும் செய்து தரப்படும்.



தொடர்புகளுக்கு :- 021 226 3233
077 228 5978



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர், திருமதி சற்குணேஸ்வரியம்மா ஜெயகாந்தன் அவர்களின் அன்புத் தாயார் **முத்தையா சிவபாக்கியம்** அவர்களது மறைவுச் செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/கோணாவில் மகாவித்தியாலயம்



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### ரவீந்திரன் சுகிர்தன்
(செந்தூரன் பந்தல்)



அன்னை மடியில் 15.10.1994
ஆண்டவன் அடியில் 16.06.2014

எங்கள் ஆருயிர் செல்வமே!
உன் முகம்காணாது தவிக்கின்றோம்! நாம்
நீ வரும் வேளை காத்திருக்கும் நாம்
இன்று கண்ணீர் மல்க கலங்குகின்றோம்!
செல்லமே! உன் குரல் கேட்டு
ஈராண்டு ஆனதைய்யா
உன்முகம் காண இன்னொரு பிறப்பு
எடுத்து வருவாய் என் செல்வமே!
உன் ஆத்மா சாந்திபெற அனைவரும்
பிரார்த்திக்கின்றோம்.

அரசடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

– ரவீந்திரன்
குடும்பத்தினர்.

(சி-5002)



## மணிவிழா நாயகியை பாராட்டுகின்றோம்

### திருமதி மேரி புஸ்பராணி அன்ரனி பொன்கலன்



எமது பாடசாலையில் மனைப்பொருளியல் பாட ஆசிரியராக 17 வருடங்கள் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் உயர்ச்சிக்கும் தன்னலமற்ற சேவையை வழங்கி 21.06.2016 அன்றிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி மே.பு.அ.பொன்கலன் அவர்களுக்கு ஓய்வு காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை | 22.03.1990 - 09.01.1996 |
| மு/இரணைப்பாலை றோ.க பாடசாலை | 10.01.1996 - 25.01.1999 |
| யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க | 26.04.1999 - 09.06.1999 |
| யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | 10.06.1999 - 21.06.2016 |

கல்லூரிச் சமூகம். யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(5027)

# தென்சீனக்கடல் விவகாரத்தில் அமெரிக்கா தலையிடக்கூடாது

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

**தென் சீனக்கடல் விவகாரத்தில் தலையீடு செய்வதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்று இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

சீனாவின் சின்ஹுவா செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"பிராந்தியத்தின் அமைதி, பாதுகாப்பு, உறுதிப்பாடு ஆகிய வற்றைப் பாதுகாப்பதற்கு, தென் சீனக் கடல் விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

தனது நட்புநாடுகளுடன் இணைந்து சீனாவை தனிமைப் படுத்துவதையும் அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நாடுகளுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி, ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் அமைதி, உறுதிப்பாடு, பாதுகாப்பை பலவீனப்படுத்தும் முயற்சிகளையும் அமெரிக்கா நிறுத்த வேண்டும்.

தென் சீனக் கடல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நாடுகள், எவ்வாறு தீர்வு காணலாம் என்று பேச்சுக்களை நடத்தி, ஒருவரின் கருத்தை மற்றவர் செவிமடுக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் தென் சீனக் கடல் விவகாரத்தில் நழுவலான நிலைப்பாட்டையே வகித்து வந்த நிலையில், பாதுகாப்புச் செயலரின் இந்தக் கருத்து, முற்றிலும் சீன சார்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. (இ-5)


### ஏல விற்பனை

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 29.06.2016 மு.ப. 10.30 மணியளவில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின் பின்னரான பாவனைக்கு உதவாத பெருட்களின் ஏல விற்பனை நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

அதிபர்

(C4998)

### ஏல விற்பனை

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் எதிர்வரும் புதன்கிழமை (29/06/2016) கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன.

1.தட்டச்சு இயந்திரம் 01

2.கணனி மேசை 01

அதிபர்,

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை, நீர்வேலி

(5023)

### சேவை நலன் பாராட்டுதலும் 60 ஆவது பிறந்த தினமும்



கடந்த 30 வருட காலமாக ஆசிரியராக கடமையாற்றி இன்று 24.06.2016 வெள்ளிக்கிழமை சேவையில் இருந்து ஓய்வு பெறுவதுடன் தனது 60 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் எமது மதிப்புக்குரிய

**ஆசிரியர்**

**செல்லையா செல்வராசா**

அவர்களது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை பிரார்த்தித்துப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:-
திரு.சி.திருஞானசம்பந்தர் குடும்பம்,
சாவகச்சேரி.

(5002)

### நூற்றாண்டு காலம் வாழ்க

தெய்வீக மணங்கமழும் புற்றளை விநாயகர் ஆலய
அருகில் கல்வி புகட்டும் ஆசான்களை தன்னகத்தே
கொண்ட கல்வித் தாயே.புற்றளை
மகா வித்தியாலயம் என்ற நாமத்துடன் நூறாவது
அகவையில் தடம்பதிக்கும் அன்னையே!இன்னும்
பல கல்விமான்களை உருவாக்கி இத்தரணியில்
உலாவிவர வழிவகுப்பாய் பள்ளியே.
இன்னும் பல நூற்றாண்டுகளை கடந்து
நீடூழி வாழ்க என இன்முகத்துடன் வாழ்த்துகின்றேன்.

பழைய மாணவி,
க.பிரகாசினி.

(சி-4994)

### கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:44சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5980 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 8சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/தனியார் தொழில்<br>தொ.இ: G/5612 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/5983 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 12<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:BSc/ QS<br>தொ.இ: G/5615 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 14செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/கணக்காளர்<br>தொ.இ: B/5984 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 31செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5622 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5985 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 13<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/விரிவுரையாளர்<br>தொ.இ: G/5625 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

**24.06.2016**
(ஆனி 10, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 4.19 மணிவரை
திருவோணம் முற்பகல் 9.40 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணிவரை
இராகுகாலம் 10.25-11.55 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி சுக் புதன் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம் இரவு 9.25இற்கு கும்-சந் | | |
| சந் | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புத்திசாதுரியமான செயற் பாடுகளால் புகழ்பெறு வீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப் புண்டு,திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**மிதுனம்:** குறைவாகப் பேசினாலும் குறை கூறாமல் இருப்பது நல்லது, தொழில் வளர்ச்சியில் சிறு தடைகள் ஏற்படலாம், வழிபாட்டில் சுகம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், முன்னேற்றம் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், களஸ்திர நன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும்,கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர் கள், வெளிநாட்டுத் தொடர் புகள் நன்மை தரும், ஆரோக் கியமான நாள்.

**கன்னி:** இல்லத்தில் இனிய சம்பவங் கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொட்ட காரி யத்தில் வெற்றி பெறுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,புதிய பொரு ட்கள் வாங்கும் எண்ணம் உரு வாகும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** புத்திசாதுரியமான செயற் பாடுகளால் புகழ் பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் நன்மையுண்டு.

**மகரம்:** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள்,ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்,திடீர் பயணங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** காரிய அலைச்சல்கள் ஏற்பட லாம்,சுப செலவுகள் இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர் வம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**மீனம்:** பொழுதுபோக்கு விடயங் களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நேற்றுக்காலை யாழ்.நடேஸ்வராக் கல்லூரியில் காங்கேசன்துறைப் பொலிஸாரால் விசேட செயற்றிட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (படங்கள் :- கு.கஜரூபன்)

# மிருதங்க பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய அறநெறி பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு மேலதிக பயிற்சியாக மிருதங்க வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இம் மிருதங்க பயிற்சியைக் கற்றுக்கொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் தங்கள் சுய விபர கோவையினை தயாரித்து கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், செல்வச் சந்நிதி ஆலயம், தொண்டைமனாறு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலும் ஆலய வருடாந்த மஹோற்சவம் 01.09.2016 ஆரம்பமாகவுள்ளதால் மஹோற்சவ காலங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்காக சமய கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்கு ஆர்வம் உள்ள ஏனைய அறநெறிப் பாடசாலை நிர்வாகிகள் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஆலய செயலாளர் அறிவித்துள்ளார். (இ

# தேசிய ஒற்றுமை இலக்கிய விழா

சோசலிச இளைஞர் சங்கம் நடத்தும் சகோதரத்துவ தினத்தை முன்னிட்டு தேசிய ஒற்றுமை என்ற தொனிப்பொருளில் யாழில் இலக்கிய விழா ஒன்று நடைபெறவுள்ளது.

அத்துடன் கவிதை, சித்திரம், நடனம் ஆகிய துறைகளில் பாடசாலை மற்றும் திறந்த மட்டத்தில் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

இதற்கமைய பாடசாலை மட்டத்தில் முதலாம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரையுள்ள வட மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்ற முடியும் என்பதும் திறந்த மட்டத்தில் பங்குபற்றும் போட்டியாளர்கள் நாடு தழுவிய ரீதியில் இருக்க முடியும்.

கவிதைகளை அனுப்புவோர் தமிழ் அல்லது சிங்கள மொழியில் தங்களது ஆற்றலை வெளிப்படுத்த முடியும்.

சித்திரப் போட்டியில் வரையும் வரைபடம் ஏ3 (294×420 mm)அளவில் இருத்தல் வேண்டும்.

நடனம் தனிநடனமாகவும் குழுநடனமாகவும் பங்குபற்ற முடியும்.படைப்புக்கள் 2016 ஜூலை மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னதாக 298, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மட்ட அனைத்து ஆக்கங்கள், பண்டைப்புக்கள் பாடசாலை அதிபர் ஊடாக உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 021 221 5483, 077 968 1333, 077 088 0580, 071 820 1710 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-5-9)

# விநோத வேடிக்கை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகவளாகத்தில்விளையாட்டுவிநோதவேடிக்கைநிகழ்வுநாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும்.(இ

# புதிய மோட்டார் சைக்கிள்களை யாழ்.செயலகத்தில் பதியலாம்

## அரச அதிபர் அறிவிப்பு

தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்யும் நடவடிக்கை யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில் 2016.06.10 ஆம் திகதி முதல் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிதாக கொள்வனவு செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களைமேற்படி அலுவலகத்தில் பதிவு செய்ய முடியும். இவற்றுக்கான பதிவிலக்கம் (வாகன இலக்கம்) On Line இல் Running numbers மூலமாகவே இடப்படுவதனால் உடனடியாகவே தங்களது பதிவுப்புத்தகத்தைபெற்றுக்கொள்ளலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

பதிவுக்கட்டணங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களின் விபரம் பின்வருமாறு,

கட்டண விபரங்கள்

பதிவுக்கட்டணம் ரூபா 2000.00

இலக்கத்தகடு ரூபா 2400.00

கோவைக்கான செலவு ரூபா 100.00

வாகன பரிசோதனை கட்டணம் ரூபா 250.00

லீசிங் ரூபா 2000.00

ஈடு வைத்தல் (Mortgage) ரூபா 200.00

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1.பூரணப்படுத்தப்பட்ட MTA-2 படிவம்

.2.Custom Clearance documents(Custom assessment notice, Custom packing list and Custom 53)

3.கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி

4.விண்ணப்பதாரியின் புகைப்படம் 02 (கடவுச்சீட்டுப் புகைப்பட அளவு வர்ணப் புகைப்படம்.புகைப்படத்தின் பின்புறத்தில் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

5.மோட்டார் சைக்கிளின் புகைப்படங்கள் 02 (Front view and side view)

6.கொள்வனவுப் பற்றுச்சீட்டின் பிரதி

7.விண்ணப்ப முகவரி தேசிய அடையாள அட்டையின் முகவரியுடன் வேறுபட்டிருப்பின் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிட குணநல சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

8.லீசிங்கில் பதிவு செய்வதாயின் பூரணப்படுத்தப்பட்ட MTA-3 படிவம் இணைக்கப்பட வேண்டும்.

9.ஈடு பதிவு செய்வதாயின் ஈட்டுப் பிணைப்பத்திரம் (Mortgage Bond) இணைக்கப்பட வேண்டும்.

மேற்படி விடயம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் விற்பனையாளர்களின் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது.மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்பவர்கள் இலகுவான முறையில் காலந்தாழ்த்தாது மோட்டார் போக்குவரத்து கட்டளைச் சட்டத்திற்கமைய பதிவுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் விற்பனையாளர்கள் தங்களினால் வழங்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தையும் வழங்கி உதவவேண்டும்.

தவிர 2014.01.01 ஆம் திகதிக்கு முன்னர் சுங்க திணைக் களத்தினால் வழங்கப்பட்ட சுங்கத்தடைநீக்க ஆவணங்களின் பட்டியலில் உள்ள மோட்டார் சைக்கிள்களை 2016.03.21 இற்கு பின் எந்த மாவட்டக் காரியாலயங்களிலும் பதிவு செய்ய முடியாது.அவை தலைமைக் காரியாலயத்திலேயே பதிவு செய்து கொள்ளல் வேண்டும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-7)




# பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கம் நடத்தும் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடை பெறும். (இ

# கருத்தரங்கு

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள அரசியல் விஞ்ஞானத்தை கற்கும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலயம் பிரதான வீதி, பருத்தித்துறையில் நடைபெற வுள்ளது. (இ

# பெற்றோர் கௌரவிப்பு

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர் செயலகம் 75 வயதிற்கு மேற்பட்ட 10 பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்களைக் கௌரவிக்கவுள்ளது.

தகுதி உடையவர்கள் கர வெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (இ-60)

# உலக சுற்றுச் சூழல் தினம் வலிகாமம் மேற்கில் இன்று

வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் வேள்ட் விசன் நிறுவனமும் இணைந்து நடத்தும் உலக சுற்றுச் சூழல் தினம் - 2016 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.


சிறப்பு விருந்தினராக வேள்ட் விசன் திட்ட இணைப்பாளர் வெ.அலெக்ஸ் றோஜ், கௌரவ விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலக சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி திருச்செல்வி சிவானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (இ

# ஒன்றுகூடல்

இலங்கை முதியோர் சுக வாழ்வுக் கழகம் நடத்தும் மாதாந்த ஒன்று கூடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அருகாமையில்) இடம்பெறும். (இ



நாவற்குழி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெயரட்ணம் அடிகளார் தலைமையில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

# யா/மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை



## கல்லூரிச் சாதனைகள் - 2015

### க.பொ.த சாதாரணதரம்




ஈ.ரஜிவர்ணன்
9A, 2014



வி.சங்கீத்
9A, 2014

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



நிற்போர் முதலாம் வரிசை:(இ.வ) கௌ.மகிழினி-166, த.ரிசானி-154, பா.குயிலன்-165, சி.ஞானுயன்-154, த.அபிராம்-155, நா.கோகுலநாத்-154, தே.பிரவீன்-157, ச.தர்ஜிதன்-153, சி.கிருபாலினி-154, ச.கஜித்-164, ர.பூவிழி-170

நிற்போர் இரண்டாம் வரிசை:(இ.வ) இ.சனோஜினி-159, அ.சாம்பவி-175, சி.ஸ்ரெய்பிக்கா-156, நீ.ரோசாணி-155, சு.வைஸ்ணவி-153, சி.சிவானுயா-161, த.லபிஜா-155, வ.அபி-156, வ.பர்நிகா-156, சா.குணப்பிரதா-171



நி.கஜானன்
186 புள்ளிகள்
மாவட்ட நிலை 09



ச.அபிசஜனி
பெண் சாரணர்
ஜனாதிபதி விருது-2015

### க.பொ.த உயர்தரம்-2015



இ.ஜெனார்த்தனன்
கணிதம், 3A
மாவட்டநிலை 11



ஜெ.சுதாகரன்
வர்த்தகம், 3A
மாவட்ட நிலை 21



மா.விதுஷா
வர்த்தகம், 3A
மாவட்ட நிலை 15



லோ.ஷஜிதா
கலை, 3A
மாவட்டநிலை 3



ஜெ.மயூரன்
கணிதம், 2AB
மாவட்டநிலை 25



இ.சண்ராஜ்
வர்த்தகம், 2AB
மாவட்டநிலை 81



க.சுஜேனி
கலை, 2AB
மாவட்ட நிலை 92



ந.சிவரஞ்சினி
கலை, ABC
மாவட்டநிலை 58



ம.லோஜினி
கலை, 2AB
மாவட்டநிலை 54



சௌ.ஜெசிந்தா
கலை, 2AB
மாவட்டநிலை 56



சு.சஷானா
வர்த்தகம்
2AB



க.சிவகாயத்திரிநாயகி
கலை A2B
மாவட்டநிலை 36



செ.கதீஸ்
கலை
2AB



க.டிபர்சன்
கலை, 2AB
மாவட்டநிலை 100



பா.தனுசாந்
வர்த்தகம்
2AB



த.ரேணுஜன்
தரம் 11
சமூக விஞ்ஞானப்போட்டி
தேசிய மட்டம்
10 ஆம் இடம்



வி.தீபிகா
1 ஆம் பிரிவு 1ஆம் இடம்
விவேகானந்தர்-பேச்சுப்போட்டி,
விவேகானந்த சபை



உ.கிபிஷா
1 ஆம் பிரிவு 1 ஆம் இடம்
ஆறுமுகநாவலர்-பேச்சுப்போட்டி
விவேகானந்தசபை



ப.லக்சனா, தி.அபிராமி, சௌ.ஜெசிந்தா, லோ.ஷஜிதா, க.சுஜேனி
தமிழ்த்தினப் போட்டி- தமிழறிவு வினாவிடை,
தேசிய மட்டம்- இரண்டாம் இடம்



க.வித்தகன்
2 ஆம் பிரிவு-3ஆம் இடம்
பண்ணிசைப்போட்டி
விவேகானந்த சபை




தெ.சோபர்ணா
தமிழ்த்தினப்போட்டி
தனியிசை
பிரிவு 2-மூன்றாமிடம்



ஞா.கஜானன்
இலங்கை தேசிய
உதைபந்தாட்ட அணி
14 வயதுப்பிரிவு
2014, 2015



சு.கௌரி
இலங்கை தேசிய
உதைபந்தாட்ட
அணி உப தலைவர்
2015, 14 வயதுப்பிரிவு
2014,2015



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட உதைபந்தாட்ட போட்டி (சமபோசா வெற்றிக்கிண்ணம்) முதலாமிடம்



க.தர்மிகா
இலங்கை தேசிய
உதைபந்தாட்ட அணி
14 வயதுப்பிரிவு 2015



பா.சானு
இலங்கை தேசிய
உதைபந்தாட்ட அணி
14 வயதுப்பிரிவு 2015



ஜெ.அனித்தா
கோலூன்றிப்பாய்தல்
19 வயதுப்பிரிவு அகில இலங்கை பாடசாலை மட்ட மெய்வல்லுநர் போட்டி-2015
(வெள்ளிப்பதக்கம்-3.20m, வர்ண விருது) தேசிய கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர்போட்டி
(வெள்ளிப்பதக்கம்-3.10m)
41 ஆவது தேசிய விளையாட்டு பெருவிழா
(தங்கப்பதக்கம்-3.25m)
Sir John Tarbat)
சிரேஷ்ட மெய்வல்லுநர்போட்டி
தங்கப்பதக்கம்-3.10m)



சி.டிலக்ஷன்
கோலூன்றிப் பாய்தல்
19 வயதுப் பிரிவு
அகில இலங்கை
பாடசாலைமட்ட
மெய்வல்லுநர் போட்டி-2015
(தங்கப்பதக்கம் 4.42m
புதிய போட்டிச் சாதனை



ப.ரிசோத்
கோலூன்றிப் பாய்தல்
21 வயதுப் பிரிவு
அகில இலங்கை
பாடசாலை
மட்ட மெய்வல்லுநர்
போட்டி-2015
(தங்கப்பதக்கம் 4.20m)



சி.ஹரீனா
உயரம் பாய்தல்
15 வயதுப்பிரிவு
அகில இலங்கை
பாடசாலை மட்ட
மெய்வல்லுநர் போட்டி 2015
(வெள்ளிப்பதக்கம்-1.49m)



இ.அபர்னா
கோலூன்றிப் பாய்தல்
18 வயதுப்பிரிவு
அகில இலங்கை பாடசாலை
மட்ட மெய்வல்லுநர்
போட்டி-2015
(வர்ண விருது2.80m)



ஸ்ரீ.டிலானி
கோலூன்றிப் பாய்தல்
18 வயதுப்பிரிவு
தேசிய கனிஷ்ட பிரிவு
மெய்வல்லுநர் போட்டி
(தங்கப்பதக்கம் 2.70m)
Sir John Tarbat)
சிரேஷ்ட
மெய்வல்லுநர் போட்டி
தங்கப்பதக்கம் 2.80m)



சே.டினேஸ்
கோலூன்றிப் பாய்தல்
19 வயதுப்பிரிவு
தேசிய கனிஷ்ட பிரிவு
மெய்வல்லுநர் போட்டி
(வெண்கலப்பதக்கம்-3.70m)



சி.கபில்ஷன்
கோலூன்றிப்பாய்தல்
17 வயதுப் பிரிவு
அகில இலங்கை பாடசாலை
மட்ட மெய்வல்லுநர்
போட்டி-2015
(வர்ண விருது-3.1m)

### மாகாண மட்டத்துடன் முடிவடைந்த போட்டிகளின் வெற்றியாளர்கள்

திறனாய்வு இரண்டாமிடம் :- செல்வி.லோஜினி மகாராசா
இராவணேசன் கூத்து - முதலாமிடம்
ஆரம்பப் பிரிவு சித்திரப் போட்டி - முதலாமிடம் :-செல்வி.பவியரசி சுதாகரன்
கவிதை பிரிவு-II 3 ஆம் இடம் செல்வி.சி.வர்ணிகா
பாவோதல்-பிரிவு II இரண்டாம் இடம் செல்வன் சி.சிவானுஜன்
வாசிப்பு 2ஆம் மொழி சிங்களம் 2ஆம் இடம் ச.சரூபன்

### விளையாட்டுத்துறைப் பயிற்றுவிப்பாளர்கள்

க.மயில்வாகனம், சி.சுபாஸ்கரன், சி.சாந்தகுமார், இ.மோகனதாஸ், ச.செந்தூரன், சி.கமலமோகன்

19 வயது பெண் உதைபந்தாட்டம் 1 ஆம் இடம், 13 வயது பெண் கரப்பந்தாட்டம் 1 ஆம் இடம், 19 வயது பெண் கரப்பந்தாட்டம் 1 ஆம் இடம், 19 வயது ஆண் ஹொக்கி 3 ஆம் இடம், 13 வயது பெண் வலைப்பந்தாட்டம் 3 ஆம் இடம்

**இச் சாதனையாளர்கள் இன்றையதினம் நடைபெறுகின்ற பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்படுகிறார்கள்**



கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சமுதாய சீர்திருத்தத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் *போதையற்ற நாட்டை உருவாக்குவோம்* எனும் தொனிப்பொருளில் செயற்றிட்டம் ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது... (படங்கள்:-பரந்தன்,மல்லாவி செய்தியாளர்கள்)

## 'போதையற்ற நாட்டை உருவாக்குவோம்'

## கிளிநொச்சியில் விழிப்புணர்வு செயற்றிட்டம்

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் ஏற்பாட்டில் *போதையற்ற நாட்டை உருவாக்குவோம்* எனும் தொனிப்பொருளில் செயற்றிட்டம் ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வை கரைச்சி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது. இவ் விழிப்புணர்வு செயற்றிட்டமானது சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களுக்காகவே ஒழுங்குபடுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் நீதிபதி ஏ.ஏ ஆனந்தராஜா கலந்து கொண்டார். அத்தோடு வளவாளர்களாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் , உளவளத்துணை உத்தியோகத்தர், சட்ட உதவி ஆணைக்குழு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்தோடு சமுதாய சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்கள், கிராம சேவையாளர்கள், கிளிநொச்சி மாவட்ட சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15-312)

# இரணைமடுக் குளத்தின் புனரமைப்பு பணிகள் அடுத்தாண்டு முடிவுபெறும்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் தெரிவிப்பு

இரணைமடுக் குளத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளை எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.

இபாட் திட்டத்தின் கீழ், சுமார் 3 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாய் செலவில், இரணைமடுக்குள அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"இவ்வாண்டு சிறுபோகத்தினைக் கைவிட்டு, இந்த புனரமைப்பு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குள் அனைத்து வேலைத்திட்டங்களும் முடிக்கப்பட வேண்டும். அந்தவகையில் தற்போது 58 சதவீதமான வேலைகள்பூர்த்தியடைந்துள்ளன" என தெரிவித்தார்.

"பிரதானமாக, வாய்க்கால் உட்கட்டுமான அபிவிருத்தியுடன் விவசாயிகளுக்கான உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதேபோல், இரணைமடுக்குளத்தின் குளக்கட்டு மேம்படுத்தல் திட்டமும் நடைபெறுகின்றது. அதேபோன்று ஏற்று நீர்ப்பாசனத்திட்ட வேலைகளை முன்னெடுப்பதற்காக, விவசாயிகளுடன் கலந்துரையாடி, அந்த வேலையை ஒப்பந்தகாரர்களிடம் ஒப்படைக்கவுள்ளோம்" என அவர் கூறினார்.

"கடந்த மாதம், கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக, ஒரு மாத காலமாக வேலைகள் தடைப்பட்டிருந்தன. 12 அடி உயரத்திலிருந்த இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் மழை காரணமாக 28 அடியாக உயர்ந்தது. குளத்தின் நீர்மட்டம் உயர்ந்ததன் காரணமாக குளத்தின் உட்பகுதி வேலைகள் தடைப்பட்டுள்ளன.

தற்போது நீரினை வெளியேற்றிக் கொண்டிருக்கின்றோம். எதிர்வரும் வாரத்தில், குளத்தின் உட்பகுதி வேலைகளைச் செய்யக்கூடியதாகவிருக்கும். குளத்தின் உட்பகுதியில் 15 அடி உயரத்திற்கு கற்களை அடுக்கவேண்டும். ஏனைய வேலைகளை அடுத்தாண்டு சிறுபோகத்துக்குள் முடிக்கக்கூடியதாக இருக்கும்" என்று அவர் மேலும் கூறினார். (2)

வன்னி வலம்

## வர்த்தக நிலையம் தீக்கிரையானது



(மல்லாவி)

கிளிநொச்சி அக்கராயன்குளம் அண்ணா சிலைச்சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாகியது. குறித்த சம்பவம் நேற்று நள்ளிரவு 1 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த வர்த்தக நிலையம் தீப்பற்றிக் கொண்டதை அடுத்து பொலிஸார் இராணுவத்தினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ பற்றிக்கொண்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை அக்கராயன்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த தீ விபத்தில் வர்த்தக நிலையத்தில் இருந்த 30 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள், பணம் என்பன எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-60-312)

# போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுபட விரும்புகின்றவர்களுக்கு உதவிகள் காத்திருக்கின்றன

## நீதவான் ஆனந்தராஜா தெரிவிப்பு

போதைப்பொருள் பாவனைக்குட்பட்டவர்கள் தங்களை மீட்டுக்கொள்ள விரும்புவர்களாக இருந்தால் சமுதாய சீர்திருத்தம் சார்ந்த உத்தியோகத்தர்கள் அல்லது சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின்நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் *போலதை அற்ற நாட்டை உருவாக்குவோம்* எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற செயற்றிட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாங்கள் எதற்காக பாதிக்கப்பட்ட நபர்களுடன் கிராம சேவையாளர்களை அழைத்திருக்கின்றோம் என்றால் கிராம சேவையாளர்கள் தான் கிராமத்தின் உண்மையான தலைவர்கள். பாராளுமன்றத்தில் சட்டம் உருவாக்கப்பட்டாலும்உயர்மட்ட அதிகாரிகள் என்ன தீர்மானம் எடுத்தாலும் அதனை கிரம சேவகர்கள் மனமுவந்து அமுல்படுத்தாவிடின் அந்த சட்டத்தினால் எந்தவித பிரயோசனமும் இல்லை.

அவ்வாறான அதிகாரம் இருக்கின்ற கிராம சேவையாளர்களை அழைத்திருப்பது ஏன் என்றால் நீங்கள்தான் மக்களுடன் நெருங்கி பழகுகின்ற உத்தியோகத்தர்கள். உங்கள் மூலம் இந்த செயற்றிட்டம் அவர்களை மிகவும் இலகுவாக சென்றடையும். பெரும்பாலாக புகைத்தலுக்கு, போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பவர்களை உங்களுக்கு தெரியும். வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் தான் படித்தவர்கள், மேற்தர மக்கள். அவ்வாறு அடிமையாகினாலும் அவர்களை சில செயற்றிட்டங்கள், சில கல்வித்திட்டங்கள் சில பயிற்சிகள் மூலம் மீட்டுக் கொள்ளலாம்.

கிராம சேவையாளர்களாகிய உங்களுக்கு தெரிய வேண்டும் இக் கிராமத்தில் இவர் இப்படி எப்படி வழிநடத்த வேண்டும், சீர்திருத்த வேண்டும், போர்தையில் இருந்து கிராமத்தை எப்படி விடுவிக்க வேண்டும் என்று போதையில் இருந்து விடுபட வேண்டும் என்று விரும்புகின்றவர்களுக்கு உதவி செய்ய காத்திருக்கின்றார்கள்

அதேபோல்போதை பொருளுக்கு அடிமையானவர்களின் பிள்ளைகளின் அபிவிருத்தி, கல்வி அவர்களது முன்னேற்றம் சம்பந்தமாகவும் அவர்களுடன் தொடர்புகொண்டு உதவிகளை பெறலாம். அவர்கள் தங்களால் இயன்ற உதவிகளை செய்வதற்கு தயாராக இருக்கின்றார்கள் என்றார். (2-312)



பச்சிலைப்பள்ளி றோட்ரிக்கழகத்தின் ஏற்பாட்டில் சேலம் றோட்ரிக்கழகத்தின் உதவியுடன் நேற்றுமுன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 30 பேருக்கு செயற்கை கால்கள் கருந்தாய் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து பொருத்தப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

### 11 குளங்களின் கீழ்

## ஆயிரத்து 678 ஏக்கரில் இடைப்போக பயிர்ச்செய்கை

முல்லைத்தீவு, வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 11 குளங்களின் கீழ் 1,678 ஏக்கரில் இடைப்போக பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் பெய்த மழை வெள்ளம்காரணமாக, குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால், சிறுபோகத்துக்கு மேலதிகமாக இடைப்போகம் செய் வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதாவது, வவுனிக்குளத்தின் கீழ் 1100 ஏக்கரிலும் அம்பலப்பெரு மாள் குளத்தின் கீழ் 50 ஏக்கரிலும் ஐயன் கன்குளத்தின் கீழ் 103 ஏக்க ரிலும் கல்விளான் குளத்தின் கீழ் 72 ஏக்கரிலும் கொல்லவிளாங் குளத்தின் கீழ் 61 ஏக்கரிலும் இடைப்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன், மல்லாவிக்குளத்தின் கீழ் 26 ஏக்கரிலும் புத்துவெட்டுவான் மருதங்குளத்தின்கீழ் 39 ஏக்கரிலும் பழைய முறிகண்டிக்குளத் தின் கீழ் 41 ஏக்கரிலும் பணங்காமம் குளத்தின் கீழ் 62 ஏக்கரிலும் தென்னியங்குளத்தின் கீழ் 100 ஏக்கரிலும் தேறாங்கண்டல் குளத்தின் கீழ் 24 ஏக்கரிலும் இடைப்போகம் மேற்கொள்ளப்படுகின்றது. இதேவேளை, இவ்வாண்டில் இக் குளங்களின் கீழ் சுமார் 4,000 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஒப்பந்தகாரர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் ஊடாக 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றி ஒப்படைப்பதற்கு விருப்பமுள்ள ஒப்பந்தகாரர்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களைப் பதிவு செய்வ தற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் ப.ஜெயராணி அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களைப்பிரதேசசெயலக நிர்வாகக்கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் அறிவித்துள்ளார். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்களை எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் நேரடியாக பிரதேச செயலக நிர்வாக கிளையில் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# வீதி ஒழுங்கு விதிகள் குறித்த ஆரம்பப் பயிற்சி செயலமர்வு

## யாழில் நேற்று முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண போக்குவரத்து அமைச்சு மற்றும் வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடனும் வழிகாட்டலுடனும் சாரதி மற்றும் நடத்துநர்கள் ஆகியோருக்கான வீதி ஒழுங்கு விதிகள் மற்றும் விபத்துக்களைத் தடுத்தல் தொடர்பான பயிற்சி செயலமர்வின் ஆரம் நிகழ்வு நேற்று காலை 8.30 மணிக்கு யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இச் செயலமர்வில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையைச் சார்ந்த சாரதிகள் கலந்து கொண்டனர்.

இவ் ஆரம்ப வைபவத்தில் வடக்கு மாகாண மீன்பிடி,போக்குவரத்து,வர்த்தக வாணிப,கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன்,அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்,மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கு.பிரபாகரமூர்த்தி ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இச் செயலமர்வின் வளவாளர்களாக ஓய்வு பெற்ற மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் இ.போ.ச பயிற்சிப் பாடசாலை அதிபர், சி.போ.வரதராஜன்,இ.போ.ச பயிற்சிப் பாடசாலை வளவாளர் ஆ.ஜேசுதாசன் ஆகியோர் பங்குபற்றினர்.

இப்பயிற்சியில் வாகன ஒழுங்கு முறையும் விபத்துக்களைத் தடுத்தலும் சிறந்த போக்குவரத்து சேவையை ஏற்படுத்துதலும் பிரயாணிகளின் எதிர்பார்ப்பும் வீதிக் குறியீடுகளும் ஆரம்ப பொறிமுறைகளும் வாகனப் பராமரிப்பும் பொதுசன உறவும் ஆகிய தலைப்புக்களில் விரிவுரைகள் நடத்தப்பட்டன. செய்முறைப் பயிற்சியும் பயிற்சியின் முடிவில் சான்றிதழும் வழங்கப்பட்டன. வடமாகாண போக்குவரத்து அதிகார சபை நியதிச்சட்டம் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சாரதிகள், நடத்துநர்கள் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு எதிர்வரும் வாரங்களில் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

**ஏலவிற்பனை**

**இடம்:**-யா.கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை
**காலம்:**-2016.07.06
**நேரம்:**-முற்பகல் 10.00

| பொருள் | எண்ணிக்கை |
|---|---|
| ஆசிரியர் மேசை (மரம்) | 01 |
| பாலர் கதிரை (கம்பி) | 43 |

அதிபர்

(5025)

**தரம்-5 மாணவர்களுக்கான**
**புலமைப்பரிசில் பரீட்சை** — மாதிரி வினாத்தாள் இல-17

**(23.06.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)**

### பகுதி II

01. 1. திருவுளானையூரான்
2.காகம், குருவி, அன்னம், சேவல்
3. உலகம், சேவல்
4.குருவி, ---
5.காகம்
6.பேடு
02. 1.இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆவார்
2. இலங்கையில் அதிகூடிய மழைவீழ்ச்சி உள்ள இடம் வட்டவளை ஆகும்.
03.சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளல்
04.1.Teacher 2.Village
3.Lion 4.Eyes
05. 1.ஐம்பது 2.கண்ணாடி 3.வாத்து 4.இரவு உணவு
06.1. ஓடி ஒளித்தல் 2.இளைப்பாறுதல்
07.1.பன்றி 2.காகம்
08.1.கெசெல்கெடிய 2.சீயய்
09.1. சிவப்பு 2. பச்சை
10.1.பணிவு 2.வலி
11.ஆனந்த சமரக்கோன்
12.1996 13.திபெத் 14.ISO 15.ஆசியா
16.குதிரை 17.முட்டை → குடம்பி → கூட்டுப்புழு → நிறையுடலி
18.2500 ரூபா 19. 1 20. 1 21. 2
22. 1.போகன்வில்லா 2.கடுபுல் 3.தாமரை 4.அந்தூரியம்
23.குவிவாடி 24. 1. 9/48 2.33
25. 6 உச்சிகளும் 9 விளிம்புகளும் 5 முகங்களும்
26. 2. 27. 05:15
28. 2 29. 2, 3
30. 1. அம்பாறை 2.ஜப்பான்
31. ரூபா 167
32.5 மேசைகள்
33.375 மீற்றர்
34. 2 35. 2 36. 1
37. 3
38. 2
39. 1
40. பொருத்தமான வாக்கியங்களை அமைக்குக

**ஆசிரிய தொழிலுக்கான தொழிற்பயிற்சி**
**தேசிய தொழில் பயிற்சி அதிகார சபையின்**
**(NVQ) தரம்-4 (தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்)**
**Dip in Teaching**

❖ வேலையற்றிருக்கும்:-
I. க.பொ.த சாதாரண தரத்தில் 5 பாடங்களுடன்
II. க.பொ.த சாதாரண தர சித்தி
III. க.பொ.த உயர்தர சித்தி
ஆகியோர் ஆசிரிய தொழிலுக்கான முன்சேவைப் பயிற்சி

(5024)

❖ சனி, ஞாயிறு தினங்களில் 6 மாதங்கள் வாண்மைத்துவ கல்வி
❖ பாடசாலைகளில் ஆசிரியர் கற்பித்தல் பயிற்சி 6 மாதம்
ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், முன்பள்ளி


பயிற்சி நிறைவு செய்ததும் தனியார், சர்வதேச, அரசாங்கப் பாடசாலை தேவைகளுக்கு (பழைய மாணவர்கள், அனுசரணையாளர்கள் மூலம்) பொருத்தமான வேதனத்துடன் நியமனம் பெற்றுக் கொள்ள வழிகாட்டப்படும்.

❖ தொடர்ந்து NVQ 5,6,7 பட்டதாரி ஆசிரியராகும் வரையான பயில்வுக்கும் வழிகாட்டப்படும்.

❖ புதிய பிரிவு விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

ஆசிரிய வாண்மை
விருத்தி நிறுவகம்,
528,பலாலி வீதி,
திருநெல்வேலி.

பதிவுகளை மேற்கொள்ள
கலாநிதி பா.தனபாலன்
(பணிப்பாளர்)
T.P-077 068 1958





சூழலியல் தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை நடத்திய ஆரோக்கிய வாழ்வைக் கொடுப்பதும் இயற்கை அனர்த்தங்களை தடுப்பதுமான மூலிகைகளை பாதுகாப்பதன் மூலம் சூழலைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் அமைந்த கண்காட்சி நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெற்றது. இக் கண்காட்சியில் 300 இற்கு மேற்பட்ட மூலிகைகள், உலர் தாவரத் தொகுப்புக்களும் நாற்றுகளும் தூயமூலிகை வித்துக்களும் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் விசேடமாக கணனிமுறைமூலம் மூலிகைத் தாவரங்களின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

# ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்திருப்பதா? பிரிந்துவிடுவதா?

## பொதுவாக்கெடுப்பு நேற்று

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நீடிப்பது தொடர்பான பொதுவாக்கெடுப்பு லண்டனில் நேற்று ஆரம்பமானது.

இதேவேளை லண்டனில் ஐரோப்பிய ஒன்றியத்தில் நீடிக்க கோரும் தலைவர்களும், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தலைவர்களும் நேரடி தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்றனர்.

அதில் குடியேற்றம், பொருளாதாரம் என்பன உள்ளிட்ட பல தலைப்புகளில் இரு தரப்பினருக்கும் இடையே காரசார விவாதம் நடைபெற்றது.

தேவையற்ற அச்சத்தை பரப்புவதாகவும் பொய் பிரசாரங்களை மேற்கொள்வதாகவும் இரு தரப்பிலும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன.

இந்த வாக்களிப்பிற்காக 46,499,537 பேர் தகுதி பெற்றுள்ள நிலையில் இங்கிலாந்து வரலாற்றில் இத்தகைய எண்ணிக்கையான மக்கள் வாக்களிப்பது இதுவே முதன்முறையாகும். (இ-5)

# லிபியாவில் ஆயுதக்களஞ்சியசாலை வெடித்துச் சிதறியதில் 25 பேர் பலி!

(திரிபோலி)

**லிபியாவில் ஆயுதக் களஞ்சிய சாலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் 25 பேர் பலியாகியுள்ளனர்.**

குறித்த வெடிப்பு சம்பவம் மேற்கு லிபியாவின் கராபுலியில் அமைந்துள்ள ஆயுதக் களஞ்சியசாலையில் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த வெடிப்பு சம்பவத்தில் 30 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் லிபியாவில் பயங்கர சண்டை

## 37 வீரர்கள் உயிரிழப்பு

(திரிபோலி)

லிபியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே பயங்கர சண்டை நடந்தது. இந்த சண்டையில் 37 வீரர்கள் பலியாகினர்.

ஐ.எஸ். ஆதிக்கம்

லிபியாவை 42 ஆண்டுகள் ஆட்சி செய்த கடாபி, 2011 ஆம் ஆண்டு வீழ்த்தப்பட்டார். அதைத் தொடர்ந்து அங்கு பல்வேறு போராளிக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்த தொடங்கின. அந்த குழுக்கள் அரச படைகளுடன் மோதி வருகின்றன.

அந்த குழுக்களில் முக்கியமான குழுவாக ஐ.எஸ். பயங்கரவாதிகள் உள்ளனர். அந்த இயக்கத்தை சேர்ந்த 5 ஆயிரம் பேர் அங்கிருந்து, அரச படைகளை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றனர.

சிர்ட்டே துறைமுகம்

கடாபியின் சொந்த நகரமான சிர்ட்டே, ஐ.எஸ். இயக்கத்தினரின் கோட்டையாக திகழ்ந்து வருகிறது. ஆனால் அந்த நகரத்தை மீண்டும் கைப்பற்றியே ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அரச படைகள், அவர்களுடன் கடந்த மே மாதம் முதல் சண்டையிட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன் சிர்ட்டே துறைமுகத்தை ஐ.எஸ். பயங்கரவாதிகளிடமிருந்து அரச படைகள் மீட்டன. இது அரச படைகளுக்கு ஊக்கம் அளிப்பதாக அமைந்தது.

கடும் சண்டை

இந்த நிலையில் அந்த நகரத்தை முழுமையாக மீட்பதற்காக ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் அரச படைகள் கடுமையாக சண்டையிட தயார் ஆகிவருகின்றன. அப்படி அந்த நகரம் முழுமையாக வீழ்ந்து விட்டால், ஏற்கனவே ஈராக் மற்றும் சிரியாவில் பலத்த பின்னடைவை சந்தித்து வரும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு இது பலத்த அடியாக அமையும்

இந்த நிலையில் நேற்று முன்தினம் சிர்ட்டே பகுதியில் இரு தரப்புக்கும் இடையே உக்கிரமான சண்டை நடந்தது. இந்த சண்டையில் 37 வீரர்கள் பலியாகினர். 100 பேர் காயம் அடைந்தனர்.

கடந்த மே மாதம் இரு தரப்பினரிடையே மோதல் தொடங்கியதில் இருந்து நடந்த மிகப்பெரிய சண்டை இது என கூறப்படுகிறது.

முன்னதாக கடந்த 24 மணி நேரத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பலரை கொன்று விட்டதாக லிபியா அரசு அறிவித்துள்ளது. (இ-5)

# கச்சதீவை மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுப்போம்

## முதலமைச்சர் ஜெயலலிதா அறிவிப்பு

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்குப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முனனெடுப்போம் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக சட்டசபையில் அறிவிப்புச் செய்துள்ளார்.

தி.மு.க. கடந்த 20 வருடங்களாக தூங்கிக் கொண்டிருந்ததாகவும் தற்பொழுது கச்சதீவுப் பிரச்சினை தமிழக சட்டசபைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் கைச்சாத்தாகிய உடன்படிக்கைகளில் கச்ச தீவு இலங்கைக்கு உரிமை யிடப்பட்டுள்ளதாகவும்.தான் இது தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடி யுள்ளதாகவும் முத லமைச்சர் மேலும் தெரி வித்தார். (இ-5)

# ஐந்து ஆண்டுகளில் 70 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதே இஸ்ரோவின் இலக்கு

## அதன் தலைவர் கிரண்குமார் தகவல்

(ஸ்ரீஹரிகோட்டா)

அடுத்த 5 ஆண்டுகளில் 70 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பதாக இஸ்ரோ தலைவர் கிரண்குமார் தெரிவித்தார்.

வெற்றிகரமாக பறந்தது

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து 20 செயற்கைக் கோள்களுடன் பி.எஸ். எல்.வி. சி-34 ரொக்கெட்டை நேற்று முன்தினம் 'இஸ்ரோ' (இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம்) வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. ஒரே நேரத்தில் அதிக பட்சமாக இஸ்ரோ விண்ணில் செலுத்திய செயற்கைகோள்கள் இதுவாகும்.

இந்த சாதனைக்கு பின்னர் இஸ்ரோ தலைவர் ஏ. எஸ்.கிரண்குமார் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.


எண்ணிக்கை அதிகரிப்பு

ரொக்கெட் ஏவும் செலவை குறைக்க இஸ்ரோ பல முயற்சிகளை எடுத்து வருகிறது. வடிவம், தொழில்நுட்ப மாற்றம், எடை குறைப்பு உள்ளிட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக பூமியை கண்காணிக்கும் செயற்கைக் கோள்களின் எடையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மற்ற நாடுகள் இந்த வகை செயற்கைக் கோள்களின் எடையை குறைத்து வருவதற்கு இணையாக இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

தற்போது வருடத்திற்கு 12 ரொக்கெட்டுகள் ஏவப்பட்டு வருகிறது. இதை 18 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். எண்ணிக்கையை அதிகரிக்கும்போது ரொக்கெட் ஒருங்கிணைப்பிற்கு இடம் போதுமானதாக இல்லாததால், ரொக்கெட் பாகங்களை ஒருங்கிணைக்க மற்றொரு ஒருங்கிணைப்புக்கூடம் அமைப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம்.



உரியநேரத்தில் முடிவு

அதேபோல் மூன்றாவது ஏவுதளம் தேவைப்பட்டால் அதை அமைப்பது பற்றியும் உரிய நேரத்தில் முடிவு எடுக்கப்படும். பி.எஸ்.எல்.வி. சி-34-ஐ தொடர்ந்து பி.எஸ். எல்.வி. சி-35 மூலம் கேட்சாட், ஆல் சாட் ஆகிய செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம்.

இந்த ஆண்டு இறுதிக்குள் பூமி ஆராய்ச்சிக்கு இரண்டு செயற்கைகோள்களும், பூமியின் முப்பரிமாண தோற்றத்தை படம் எடுப்பதற்கு ஒரு செயற்கைக்கோளும், கல்வி நிறுவனங்கள் சார்பாக 2 செயற்கைகோள், ஜிசாட் 18 செயற்கைகோள் மற்றும் ஜி.எஸ்.எல்.வி. மார்க் 2, ஜி.எஸ்.எல்.வி. மார்க் 3 ரொககெட்டுகள் விண்ணில் ஏவப்படவுள்ளது என்றார். (இ-5)

# அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தும் திறன்

## வடகொரிய ஜனாதிபதி பெருமிதம்

வடகொரியா கடந்த புதன் கிழமை நடத்திய ஏவுகணை சோதனை, பசுபிக் பகுதியில் உள்ள அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தங்களுக்கு உள்ள திறமையை நிரூபித்திருக்கிறது என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன் தெரிவித்துள்ளார்.

இரண்டு நடுத்தர ரக ஏவுகணைகள் சோதனையை, கிம் ஜாங்-உன் நேரடியாக மேற்பார்வையிட்டதாக பியாங்யாங்கில் உள்ள அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இரண்டு ஏவுகணைகளில் ஒன்று தோல்வியடைந்து விட்டதாகவும், இன்னொன்று பலநூறு கிலோமீற்றர் பயணித்ததாகவும் அமெரிக்க மற்றும் தென்கொரிய இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.


அணுசக்தித் தாக்குதலை நடத்தும் தங்களுக்குள்ள திறமைக்கு வலுச் சேர்த்திருப்பதாக இந்த மிகப்பெரிய நிகழ்வு அமைந்திருப்பதாக வடகொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனை, ஐ.நா. மன்றத்தின் தடைகளை மீறி நடத்தப்பட்டுள்ளது. (இ-5)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பல்பகுதியங்கள்:ஒரு பசுமைத் தொகுப்பு


உயிர்ச்சுவட்டு வளங்களின் (Fossil resources) பாவனை யானது இன்றைய நவீன சமூகத்தின் மத்தியில் மிகவும் அத்தியாவசியமானதாக காணப்படுகின்றது. ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவ்வளங்களைக் கொண்டு பயன்பெறு



உரு:01

வதே விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் பிரதான இலக்காக காணப்பட்டது. இதற்கு காரணம் அக்காலப்பகுதியில் மிகையாக காணப்பட்ட வளங்களே ஆகும். ஆனால் பின்னைய காலப்பகுதியில் ஏற்பட்ட சனத்தொகை வளர்ச்சி இவ்வளங்களுக்கான கேள்வியை அதிகரித்துவிட்டது. இதனால் இவ்வளங்கள் உற்பத்தியாகும். வீதத்தை விட உபயோகிக்கப்பட்டு வரும் வீதமே அதிகமாக காணப்படுகின்றது. இதற்கான ஒரே தீர்வு நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியே! (Sustainable development) "Development that meets the

உரு:02



**2-methyl-1, 3-butadiene**

needs of the presence without compromising the ability of future generation to meet their own needs"- Brutland commission. இந்நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியின் இலக்கை அடைவதற்கான சந்தர்ப்பத்தை பசுமை இரசாயனவியல் (Green Chemistry) வழங்குகின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பசுமை இரசாயனவியலின் 12 பிரதான தத்துவங்களும் மனித நலனிற்கு மற்றும் சுற்றாடலுக்கு பாதிப்பை விளைவிக்கும் பொருட்களின் பாவனையைக் குறைத்தல் சக்தி, நீர்ப்பாவனையைக் குறைத்தல் மற்றும் வினைத்திறனை அதிகப்படுத்தல் போன்ற குறிக்கோள்களைக் கொண்டு செயற்படுகின்றது.

உரு:01

இதன் அடிப்படையில் உயிர் ச்சுவட்டு வளங்களுக்கு பதிலாக உயிர்த்திணிவு (Biomass) வளங்களை உபயோகிப்பதனால் சுற்றாடலுக்கு நன்மை பயக்கும் வகையில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திகளை மேற்கொள்ளலாம்.இவை தவிர உயிர்க் கோளத்தில் (Biosphere) வருடாந்தம் 120 மில்லியன்களுக்கும் மேற்பட்ட உயிர்த்திணிவு ஒளித்தொகுப்பின் மூலம் தொகுக்கப்பட்டு வருகின்றமையும் இவற்றில் 5 சதவீதமான உயிர்த்திணிவையே மனிதன் பாவனை செய்து வருகிறான் என்பதும் வருத்தத்திற்குரிய விடயமே! அத்துடன் உயிர்ச்சுவட்டு எரிபொருளின் 7 சதவீதமான எரிபொருள் பல்பகுதிய தொகுப்பிற்கு உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இவற் றைக் கருத்திற் கொண்டு டேர்பீன்கள் (Terpenes) மற்றும் லிக்னின் (Lignin) போன்றவற்றை பல்பகுதிய தொகுப்பிற்கான சிறந்த தேர்வுக ளாக கருதலாம்.

டேர்பின்களானது ஐதரோகாபன்களே (Hydrocarbons)ஆகும். இவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இரட்டை பிணைப்புக்கள் காணப்படும். இவற்றின் ஐசோபிரின் (Isoprene) காபன் கட்டமைப்பு 2- methyl-1,3-butadiene என அழைக்கப்படும்.


உரு:2

பல்பகுதிய தொகுப்புகளின் அதிகமாக உபயோகிக்கப்படும் டேர்மின்களானவை :$\alpha$-Pinen,$\beta$–Pinen மற்றும் $\alpha$–Terpinol பல்பகுதிய இரசாயனவியலில் (Polymer Chemistry) டேர்பீன்களை உபயோகிப்பதற்கான பிரதான காரணங்கள்,

1-இவற்றில் காணப்படும் பல்வேறுபட்டதொழிற்பாட்டுக்கூட்டங்கள் (functional groups) இலகுவில் மாற்றியமைக்க முடியும்.

2-இவை சுற்றாடலில் அதிகமாக காணப்படுவது மட்டுமன்றி (Benzene,Cyclohexane மற்றும் Cyclohexene பதார்த்தங்களைக் கொண்ட எரிபொருட்களுக்கு பதிலாக உபயோகிக்கப்படலாம்.

3-எமக்கு விரும்பிய உயிர்ப்பிரிகையடையக்கூடிய (Biodegradable) நீர் வெறுக்கும் (Hydrophobic) திரவப் பளிங்குருவாகக் கூடிய




உரு:04


(Liguidcrys tallinity) உயிர்த் தொழிற்பாடு (Bioactivity) போன்ற பண்புகளைக் கொண்ட பல்பகுதியங்களை தொகுக்கலாம்.

டேர்பீன்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பதார்த்தங்களின் மூலம் பல்வேறு வகையான பல்பகுதியங்களை தொகுக்கலாம். உ+ம் "வனிலின்"(Vanillin) மூலம் பெறப்படும்."பொலிஎஸ்டர்" (Polyester), வனிலினானது தாவரங்களிலிருந்து பெறப்படும் பதார்த்தங்கள். இவை உணவுப் பொருட்கள், பானங்கள் போன்றவற்றில் வாசனைத்திரவியமாக பயன்படுத்தப்படுகின்றது.

உரு:03


இவற்றில் காணப்படும் தொழிற்பாட்டுக்கூட்டம் இவற்றில் பல் வேறு வகையான மாற்றங்களை மேற்கொள்ளும் சாத்தியப்பாட்டை வழங்குகின்றது.இவ்வகையான வனி லின்களிலிருந்து தொகுக்கப்பட்ட பல்பகுதியமானது சாதாரண முறையில் தொகுக்கப்பட்டுவரும் Polyethylene Tetraphthalate (PET) இன் வெப்ப பண்பை ஒத்துக் காணப் படுகின்றது என்பது வியப்பூட்டும் உண்மையே!

இன்னுமொரு உதாரணமாக




"லிமொனின்"(Limonene) களிலிருந்தான Polyamide தொகுப்பைக் கருதலாம். பொலி ஏமைட்டுக்கள் பல்பகுதியங்களில் முக்கிய மானதொரு பல்பகுதிய வகையாகும். இவை பாதணிகள், தொழிற்சாலை இயந்திரங்கள், வர்ணப்பூச்சு மற்றும் வைத்திய உபகரணங்களில் உபயோகிக்கப்படுகின்றது. பொலி ஏமைட் ஆனது எரிபொருள் வளங்கள் மூலம் அல்லது மீள்புதுப்பிக்கக்கூடிய (Renewable) வளங்கள் மூலம் தொகுக்கப்படக்கூடியது. எரிபொருட்களின் அதி உயர் பாவனை, அவற்றின் விலை உயர்வு, அவற்றினால் சூழலுக்கு ஏற்படும் அபாயங்களை கருதிற் கொண்டால் பல்பகுதிய தொகுப்பிற்கு மீள்புதுப்பிக்கக்கூடிய வளங்களைக் கொண்ட தொகுப்பு முறைகளைக்கை யாள

உரு:05




வேண்டியது காலத்தின் தேவை. எனவேதான் டேர்பீன்கள்,தற்போது பாவனையிலுள்ள பெற்றோலிய இரசாயனங்களுக்கு (Petrochemicals) பதிலாக பிரதியீடு செய்யும் தன்மையைக் கொண்டுள்ளன. இதனடிப்படையில் "லிமொனின்" பதார்த்தங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றது.

"லிமொனின்" பதார்த்தமானது அதிகளவில் காணப்பட்டாலும் அவற்றில் இயற்கை யாகவே காணப்படுகின்ற இரண்டு இரட்டைப் பிணைப்புகள் பல்பகுதிய தொகுப்பிற்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. இவ்விரட்டை பிணைப்புகளைக் கருத்திற்கொண்டு "அமைன்"(Amine) தொழிற்பாட்டுக் கூட்டத்தை இதனுள் அறிமுகப்படுத்தி Polyamide தொகுப்பை இலகுவாக மேற்கொள்ளலாம்.

உரு:04

மனித வாழ்வானது பல்பகுதியங்களுடன் இணைந்தே காணப்படுகின்றது.

இவை இல்லாத ஒரு நாள் எவ்வாறு அமையும் என் பது சிந்தனைக்கு அப்பாற்பட்ட கேள்வி. காரணம் எம்மால் பல்பகுதியங்களின் உபயோகமின்றி வாழ்வது மிகவும் கடினம். ஆனால் அதிகரித்துவரும் பல்பகு தியங்களின் பாவனையால் அதிகப்படியாக பாதிக்கப்பட்டது எமது பூமித்தாய் மட்டுமே! எனவே, இப்பாவனையை குறைக்கும் முயற்சியே இந்தப் பல்பகுதியங்கள் ஒரு பசுமைத்தொகுப்பு விளக்கி நிற்கின்றது.





ரா.பா(f)த்திமா றிப்(f) லா
Demonstrator,
இரசாயனவியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.


## வாரத்திற்கு ஒரு புதிர்! 163

உலகின் முதல் மடிக்கணனி (First Laptop in the world) என்ன பெயரால் அழைக்கப்பட்டது?

புதிர் 163இற்கான விடைகளை 04.07.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 162 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி


கே.இராஜகோபால்
அடைக்கலந்தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
மாவடி, வட்டுக்கோட்டை.

புதிர் 162க்கான கேள்வியும் விடையும்:

அலைபேசியில் அழைப்புக்கள் மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் மின்காந்த அலை எது?
ரேடியோஅலை (Radio waves)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 163

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................



# யா/புற்றளை ம
# நூற்றா

### கிராமப்புறச் சூழலில் மிகவும் அமைதியான முறையில் கல்வி மற்றும் பாரம்பரியத்தை இறுக்கமாகப் பேணிவரும் பாடசாலை



யா/புற்றளை மகா வித்தியாலயமானது 1916 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 2016 இல் நூற்றாண்டு விழாக்காண்பதை முன்னிட்டு வெளியிடவிருக்கும் நூற்றாண்டு விசேட விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சைவப்பிள்ளைகளின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பேணக்கூடிய விதத்தில் ஒரு பாடசாலை உருவாகவேண்டும் என்ற எண்ணத்தில் 1916 இல் புற்றளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மித்த பகுதியில் புலோலி புற்றளை சாரதாபீட வித்தியாசாலை என்ற பெயரில் 26 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியானது பல வளர்ச்சிகளைப் படிப்படியாகப் பெற்று 1968 இல் புற்றளை மகா வித்தியாலயம் என்ற பெயர் சூட்டப்பட்டு தற்போது 375 மாணவர்களைக்கொண்டு ஒரு மகா வித்தியாலயமாக இயங்கிவருவது இதன் சிறப்பம்சமாகும்.

மிகப்பெரிய பாடசாலைகள் அமைந்துள்ள பருத்தித்துறைப் பகுதியில் புலோலி கிழக்கில் கிராமப்புறச்சூழலில் மிகவும் அமைதியான முறையில் கல்வி மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை இறுக்கமாகப் பேணி ஒரு சிறந்த பாடசாலையாக மேற்படி வித்தியாலயம் இன்னமும் இயங்கிவருவது மகிழ்வைத்தருகின்றது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இப்பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் அயராத உழைப்புமே காரணம் என்றால் மிகையாகாது.

யுத்த காலத்தின்போது பாரிய இடப்பெயர்வுகள் ஏற்பட்ட போதிலும் ஹாட்லிக் கல்லூரி மற்றும் வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் புற்றளை மகா வித்தியாலயத்திலேயே தற்காலிகமாக இயங்கி அவற்றின் பணிகளை செவ்வனே நிறைவேற்றின. இத்தனை சிறப்புக்கள் பொருந்திய இப்பாடசாலை தனது நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், முதலமைச்சர், வடக்கு மாகாணம்.**

---

### பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி



*ஆண்டவரைப் போற்றிப் பெருமைப்படுத்துவோம். ஏனெனில் வல்லவராம் கடவுள் எமக்கு அரும்பெரும் செயல் செய்துள்ளார்.*

இலங்கையின் கல்விப் பாரம்பரியத்தில் வடமராட்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. வடமராட்சியின் கல்விச் சிறப்பிற்கு இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சிறந்த பாடசாலைகளே அடித்தளங்களாக இருந்துள்ளன. கற்றவர்களின் உறைவிடமாக உள்ள வடமராட்சியின் கல்வி மேன்மைக்கான அடித்தளமாக விளங்கும் யா/புற்றளை மகா வித்தியாலயம் தனது 100 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. இப்பாடசாலை ஏராளமான கல்விமான்களை உருவாக்கியுள்ளது. உலகிற்கு உகந்த நிபுணர்களை உருவாக்கிய இப்பாடசாலையின் புதல்வர்கள் தமது அன்னையை நினைத்து பெருமை கொள்கின்றார்கள். கல்வியின் உயர் நோக்காக விளங்கும் ஒழுக்கமும் பண்பும் உள்ள உயர்வான சமுதாயத்தை உருவாக்கும் உந்துசக்தி தளங்கள் பாடசாலைகள்தான் என்பதற்கு இப்பாடசாலையும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது.

இயேசுபிரான் இவ்வுலகில் சிறுவனாக இருந்தபோது ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்த கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் என்று எமது பரிசுத்த வேதாகமத்திலே நாம் படிக்கின்றோம். அதேபோல் பாடசாலைகளின் அறுவடைகளாக விளங்கும்எமதுமாணவர்கள்கல்விஅறிவும் பண்பாடும் ஆற்றலும் நல்லொழுக்கமும் உள்ள சிறந்த நற்பிரஜைகளாக உருவாக வேண்டும். இறைபற்றும் சமூகப் பற்றும் நேர்மனப்பான்மையும் சமநிலை ஆளுமையும் உள்ள பெருமைமிக்க சமூகத் தினை ஒழுங்கமைக்கவேண்டும். கடந்த ஒரு நூற்றாண்டில் இப்பாடசாலை இச்சமூகத்திற்குஆற்றிவரும் அளப்பரிய பணிகளைப் பாராட்டுவதுடன் எதிர் காலத்திலும் இப்பாடசாலையின் புகழ் தரணியெங்கும் பரவி சரித்திரம் படைத்திட எல்லாம் வல்ல இறைவனின் அருளும் ஆசியும் நிறைவாகக் கிடைத்திட இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இப்பாடசாலையின் சிறப்பினால் எமது சமூகம் பெற்ற எல்லா நன்மைத்தனங்களுக்கும் எமது கத்தோலிக்க மக்கள் சார்பில் எனது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

**அருட்பணி அருளானந்தம்யாவிஸ், மறைக்கோட்ட குருமுதல்வர், தூய தோமையார் ஆலயம், பருத்தித்துறை.**

---

### வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச்செய்தி



யா/புற்றளை மகா வித்தியாலயம் தனது கல்விச் சேவையில் நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதையிட்டு அதனையொட்டி நூற்றாண்டு மலர் வெளியிடுவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

இக்கல்லூரி மாதாவின் பழைய மாணவன் என்ற வகையில் பெருமை அடைகின்றேன். நாம் இவ்வளவு தூரம் உயர்வாக இருப்பதற்கு இக்கல்லூரியில் கல்வி கற்றதுதான் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

***கண் உடையார் என்பார் கற்றோர் முகத்திரண்டு புண் உடையார் கல்லாதவர்***

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருவாக்கிற்கேற்ப இவ்வித்தியாலயம் தன் கல்விப் பணியை அர்ப்பணிப்புடன் செய்து வருவது போற்றுதற்குரிய விடயமாகும்.

இன்றைய கணனியுகத்தில் நல்லொழுக்கமுள்ள நற்பிரஜைகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாக உள்ளது. நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் கல்விப் பணியில் தம்மை இணைத்து அரும்பணி ஆற்றிவரும் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், கலாசாலை குடும்பத்தினர் யாவர்க்கும் எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வாழ்க வளமுடன்**
**சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் ஜே.பி. இந்துமத குருபீடாதிபதி, ஆதீன கர்த்தா, புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

---

### ஆசிச்செய்தி



யா/புற்றளை மகா வித்தியாலயமானது 1916 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றைய நாள் வரை அதிபர், ஆசிரியர்களின் சிறப்பான வழிநடத்தலில் மாணவர்களுக்குக் கல்வியை ஊட்டுவதில் சிறப்புமிக்கதாக விளங்குகின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் பெரிய கல்வி மான்களாகவும் பட்டதாரிகளாகவும் உத்தியோகத்தர்களாகவும் சிறப்புமிக்கவர்களாகவும் வாழ்ப வர்களாக அறிகின்றேன்.

இனிவரும் காலங்களிலும் கல்வி பயிலுகின்ற மாணவர்கள் கல்வியில் அவரவர் தாங்கள் விரும்பிய இலக்கை அடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்க்க வேண்டும். இப்பாடசா லையும் இவ்விழாவும் இங்கு கடமையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர், ஆசிரியைகளும் கல்வி பயிலுகின்ற மாணவ மாணவிகளும் தேகாரோக்கியமும் நீண்ட ஆயுளும் இலட்சுமி கடாட்சமும் வித்தியா விருத்தியும் உத்தியோக இலாபமும் சகல சௌபாக்கியங்களும் பெற்றுவாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல புற்றளை சித்தி விநாயகப் பெருமானை வேண்டி எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**எம்பெருமானின் நல்லாசியுடன் ஆலய பிரதம குருக்கள்**
**சோ.ஜெயபாலசுந்தரக்குருக்கள்,**
**புற்றளைப்பிள்ளையார் தேவஸ்தானம்.**

---

யா/ புற்றளை மகா வி
ஆரம்பம்:191
நோக்கம்: சைவப்பிள்ளைக
பாரம்பரியத்தையும் பண்பாட்
இடம்:புற்றளைப் பிள்ளையார் ஆ
பகுதியில் ஆரம்பிக்கப்
காணியை வழங்கியோர்: புலோலி
சுப்பர் பெண்- சின்ன
ஆரம்பப் பெயர்: 1916-புலோலி
வித்தியாசாலை
1935-வராத்துப்பளை இந்து தமிழ்க்
1960/1961-அரசாங்கம் பெ
01.07.1965-புற்றளை வி
1968-புற்றளை மகாவித்
மாணவர் தொகை:ஆர
தற்போது-375, அதிபர்க
முக்கிய சேவை: கிராமப் புறச்சூழ
கல்வியும் பாரம்பரியம்
ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம்
இடம்பெயர்ந்தபோது இங்கு
நூற்றாண்டு-2016

---

### நூற்றாண்டு விழாக் கொண்டாடும் வேளையில் வாழ்த்துகின்றோம்



புலமை ஒலி இடையறாது ஒலிக்கின்ற பெருமைக் குரிய புலோலியில் சைவப் பிள்ளைகளுக்கு ஏற்ற பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பேணுதல் எனும் உயர்ந்த நோக்கோடு உருவாக்கப்பட்ட புலோலி புற்றளை சாரதாபீட வித்தியாசாலை இன்று புதுப்பொலிவுடன் புற்றளை மகா வித்தியாலயம் என்னும் உயர்வோடு நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் வேளையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

புற்றளைப் பிள்ளையார் அருகிருந்து அருளாட்சி செய்கின்றமை இப்பாடசாலையின் தனித்துவமாகும் இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் பல்துறைகளிலும் பிரகாசிக்கின்றமை யாவரும் அறிந்ததே.

ஆரம்பத்தில் 26 மாணவர்களுடன் கல்விப் பணியை ஆரம்பித்த பாடசாலை தற்பொழுது 375 மாணவர்களுடன் இயங்குவதோடு 18 அதிபர்களின் ஆற்றலும் ஆளுமையும் இவ்வளர்ச்சிக்கு அணி செய்தமை பெருமைக்குரிய குறிப்பிடத் தக்க விடயமாகும்.

இடருற்ற வேளைகளில் ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் இயங்குவதற்குப் கல்விச் சேவை புரிவதற்கும் இப்பாடசாலை உதவி நல்கியமை இவ்வித்தியாசாலையின் மிகச்சிறப்பான பணியாகவும் கொள்ளலாம்.

இவ்வாறு அரும்பெரும் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் யா/புற்றளை மகா வித்தியாலயம் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் உயர்வுகண்டு மேலும் பல விழாக்கள் காணவும் புற்றளை விநாயகப் பெருமானின் அருட்கடாட்சம் மாணவர்களுக்குக் கிடைக்கவும் நூற்றாண்டு விழா சிறக்கவும் என் நல்வாழ்த் துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன், அரசாங்க அதிபர்,**
**யாழ்.மாவட்டம்.**



...ந்து காட் இக்க நிற்கி

---

### ஆசிச்செய்தி



சைவப் பண்பாடும் தமிழ்ப் பாரம்பரியமும் இப்பூவுலகிலே நிலைத்து நிற்கவேண்டும் என்ற உணர்வுபூர்வமான சிந்தனையினால் இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்பு புலோலிப் பகுதியில் வாழ்ந்த சான்றோர்களால் உருவாக்கப்பட்டதே புற்றளை மகா வித்தியாலயமாகும். புற்றளை சாரதாபீடம் என்ற நாமத்துடன் அவதரித்து இன்று புற்றளை மகா வித்தியாலயமாக எழுச்சியுற்று நிற்கின்றது. மனிதப் பண்புகளையும் வாழ்க்கைத் தேர்ச்சிகளையும் ஆயிரக்கணக்கான சிறார்களுக்கு ஊட்டி வளர்த்து சமூகத்தில் அவர்கள் சான்றோர்களாக, உயர்வழிகாட்டிகளாக, தொழில் விற்பன்னர்களாக எழுந்து நிற்பதைக் கண்டு கல்லூரித்தாய் அகமகிழ்கிறாள்.

புற்றளை மகா வித்தியாலயம் திண்ணைப் பள்ளிக்கூடமாக உதயமாகி பலரது முயற்சியினாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் பல்வேறு தடைகள், சவால்களையும் முறியடித்து தன்னிலையிலே பெருமிதத்துடன் எழுந்து நிற்கின்றது. இக்கலாசாலையில் 16 அதிபர்களின் வழிகாட்டலில் கடமைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் பதினேழாவது அதிபராகக் கடமையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை பெரும்பேறாகக் கருதி அருள்மழை பொழியும் புற்றளை சித்திவிநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை மனதில் பதித்து புற்றளை மகா வித்தியாலயத் தாயை பல்லூழி காலம் வாழவேண்டுமென வாழ்த்துத் தெரிவிப்பதில் இறும்பூதெய்துகிறேன்.

**ஆ.சிவநாதன், அதிபர்**

---

### புற்றளைத்தாயின் பதம் போற்றி வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன். பழைய மாணவர் சங்கத்தின் இதயத்திலிருந்து ஆசித்துளிகள்



ஒரு பாடசாலையின் இதயமாகச் செயற்படுவது பழைய மாணவர் சங்கமே.புற்றளைத் தாய் நூற்றாண்டு கொண்டாடும் அதேவேளை புற்றளை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் வெற்றி விழாக்காணுகின்றது என்பது எமது சங்கத்தினர் அனைவரும் மனமகிழ்வு உறும் செய்தியாகும்.

ஆலமரம் போல் பரந்து விரிந்து பல்லாயிரம்மாணவர்களை வித்தகனாக, பண்டிதனாக,வைத்தியராக, பொறியியலாளராக, சட்டத்தரணியாக, நீதிபதியாக, நல்லாசிரியனாக, கணக்காள னாக உருவாக்கிய எமது புற்றளை மகா வித்தியா லயம் நூற்றாண்டு விழா காண்பது எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை தருகிறது.

எமதருமை கல்லூரி எம்மருமை மாணவர்களை
உலகளாவியரீதியில்உயர்ந்துநிற்கசெய்தபெருமைஎண்ணி
சிந்தை மகிழ்வுற்று சிறப்புறவே வாழ
வாழ்த்தி நிற்கும் எமது சங்கம்
ஆற்றல் நிறைந்த அறிவாளிகளை
மனிதத்துவம் நிறைந்த மனிதர்களை
படைப்புக்களை தந்திடும் படைப்பாளிகளை
பண்பு நிறைந்த பாவலர்களை உருவாக்கிய
புற்றளைத் தாயின் பதம் போற்றி
வாழ்க வாழ்கவென வாழ்த்தி விடைகாணும்.

**V.K.சண்முகநாதன், புற்றளை பழைய மாணவர் சங்கத்தலைவர், (தாய்ச்சங்கம்)**

---

### தனது கல்வித்தரத்தை குறைவடையாது பேணி பொதுப்பரீட்சைகளில் இப் பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற வழி வகுக்கிறது.



யா/புற்றளை மகா வித்தியாலயமானதுநூற்றாண்டு விழாவினைக்கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகிறேன். 1916 ஆம் ஆண்டில் புலோலி புற்றளை சாரதா பீட வித்தியாசாலை எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று ஒரு 1 சி தரப் பாடசாலையாகப் பெரு வளர்ச்சி கண்டுள்ளது. அமைதியான கிராமப்புறச் சூழலில் இப் பாடசாலை இயங்கி வருவது மாணவர்கள் சிறந்த ஒழுக்கத்துடன் கூடிய கல்வியைப் பெறுவதற்கு உகந்ததாகவுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது யா/ ஹாட்லிக் கல்லூரி, யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இப்பாடசாலையில் இயங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். வடமராட்சியின் புகழ்பூத்த பாடசாலையான யா/ ஹாட்லிக் கல்லூரிக்கு புகலிடம் கொடுத்த இப்பாடசாலை தனது கல்வித் தரத்தினைக் குறைவடையாது பேணிப் பொதுப் பரீட்சைகளில் இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு வழிவகுத்து வருகின்றது. இப்பாடசாலையானது மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தினையும் விழுமியப் பண்புகளையும் புகட்டி வருவதன் மூலம் சிறந்த பிரஜைகளாக அவர்களை உருவாக்கி வருகின்றது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வித்திட்ட இப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களது அரும் பணியும் பாடசாலையினது, பழைய மாணவர்கள் சமூகத்தினது ஒத்துழைப்பும் என்றும் பாராட்டுதற்குரியது. இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று இப்பிரதேச மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தினை அள்ளி வழங்க வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.உதயகுமார், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.**

---

### இன்றுபோல் என்றும் மகத்தான கல்விப் ... தொடர வாழ்த்துகின்றோம்




இந்துமா ஆழியிலே இலங்குகின்ற முத்தான இலங்கை நாடதிலே அணி வீரன் சங்கிலியன் ஆண்ட வடதிசை யின் மணிமுடிபோல் ஒளிவிளங்கும் வடமராட்சி மண்ணதிலேஎழிலுற விளங்கும் புற்றளைப் பிரதேசத்தில் கல்வியின்கலங்கரைவிளக்காக மிளிர்ந்து கொண்டிருக்கும் யா/புற்றளை மகா வித்தியாலயம் என்னும் கல்விப் பேராலயம்தனது அரும்பணிப்பயணத்தின் நூறாவதுமைல் கல்லை அடையும் நூற்றாண்டு விழா ம... செய்திவழங்குவதில் பேருவகை கொள்கிறேன். புலோலி கிழக்கு... சுப்பர் பெண்-சின்னாச்சி அவர்க ளால் வழங்கப்பட்ட... 1916 இல் புலோலி புற்றளை சாரதா வித்தியாசாலை என... கொண்டு ஆரம்பிக்கப்பட்டு 1960/1961 இல் அரசுடைமை... 01.07.1965 இல் புற்றளை வித்தியா லயம் எனவும் 1968 இ... றளை மகா வித்தியாலயம் எனவும் அழைக்கப்பட்டு இன்று... வில்லாதகல்வியினை அள்ளிவழங்கிசமுதாயத்தில் மாணவ... ஜையாக உருவாக்கும் அமுதசுரபிபோலவிளங்குகின்றது. இ... கால வரலாற்றிலே யா/புற்றளை மகா வித்தியா லயத்தினா... சுப்பட்ட உயிர்ச்சிற்பங்கள் இன்று இலங்கைத்திருநாட்டின் கல்... சேவைகளிலும் புலம்பெயர் நாடுகளிலும் உயிரோட்டமா... னையும் பெரும் புகழோடு விளங்குவதனையும் காணலாம்... 26 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று 3... களுடன் இயங்கி வருகின்றது. இதுவரை 18 புகழ்பூத்த அ... பாடசாலையின் வளர்ச்சிக்குத் தம்மேலான சேவை யினை... கின்றார்கள். இவ்விழாவில் வெளியிடப்படும் நூற்றாண்டு வி... யாலயத்தின் வரலாற்றையும் சிறப்பையும் தொன்மையை... இளம்சமுதாயத்திற்கு வழங்கும் காத்திர மான பணியை எடு... வடிவமாகவே கருதுகின்றேன். எனவே தூரநோக்கோடு மேற்... நற்செயல் சிறப்படையவாழ்த்துத்தெரிவிப்பதில் பெருமகிழ்வ...

**திரு.இ.தஜெயசீலன், பிரதேச செயலர்,பிரதேச செயலகம்,...**

# மகாவித்தியாலய
# ாண்டுவிழா-2016

ா மகா வித்தியாலயம்
ரம்பம்:1916
ப்பிள்ளைகளுக்கு ஏற்ற
பண்பாட்டையும் பேணுதல்.
ளையார் ஆலயத்தை அண்மித்த
ஆரம்பிக்கப்பட்டது.
ர்: புலோலி கிழக்கு கணபதியார்
ண்- சின்னாச்சி
-புலோலி புற்றளை சாரதாபீட
யோசாலை
ந்து தமிழ்க் கலவன் பாடசாலை (தனியார்)
ாங்கம் பொறுப்பேற்றமை
ற்றளை வித்தியாலயம்
ள மகாவித்தியாலயம்
தாகை:ஆரம்பம்- 26
5, அதிபர்கள் -18 பேர்
ப் புறச்சூழலில் அமைதியான
ம்பரியம் பேணலும்
வலாயுதம் மகா வித்தியாலயம்
து இங்கு செயற்பட்டது.
ண்டு-2016 ஜூன்



Congratulations!

## மாணவர்களின் கல்வியிலும் பாரம்பரியத்திலும் பாரியளவில் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது.



10 தசாப்தங்களாக மிகுந்த அர்ப்பணிப்புடன் கல்விச் சேவையை ஆற்றிவரும் யா/புற்றளை மகா வித்தியாலயத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நூற்றாண்டு விழா சிறப்பு மலருக்கான வாழ்த்துச்செய்தியை வழங்கும் சந்தர்ப்பம் கிட்டியதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

1916 ஆம் ஆண்டு புற்றளைப் பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் சிறியளவில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது 4 தடவைகள் பெயர் மாற்றம் பெற்று 1968 ஆம் ஆண்டு யா/புற்றளை மகா வித்தியாலயம் என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டு கல்விச் சேவையை முன்னெடுத்து வருகின்றது. இவ்வித்தியாலயத்தின் முக்கிய நோக்கம் கல்வி மட்டுமல்லாது சைவப்பிள்ளைகளுக்கு ஏற்ற பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பேணுதல் ஆகும்.

யா/புற்றளை மகா வித்தியாலயமானது 26 மாணவர்களை மாத்திரம் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 375 மாணவர்களுடன் சமூகத்தில் வளர்ந்துவரும் பாடசாலையாக இனங்காணப்பட்டுள்ளது. கிராமப்புறங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ள இவ்வித்தியாலயம் அங்கு வாழும் மாணவர்களின் கல்வியிலும் பாரம்பரியத்திலும் பெரியளவில் மாறுதலை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது.

நூற்றாண்டு விழாவைக்காணும் யா/ புற்றளை மகா வித்தியாலயம் கிராமத்தில் அமைந்திருந்தாலும் தன்னளவில் தரமான கல்வியை வழங்குவதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் வருங்காலத் தலைமுறையினருக்கு அறிவொளி ஊட்டி நல்வழி காட்டும் நிலையிடமாகத் தன்னைத் தக்க வைத்துக்கொண்டிருப்பது மகிழ்ச்சியாகவும் பாராட்டக்கூடியதாகவும் அமைவதோடு இத்தகைய முன்மாதிரியை ஏனைய கிராமப்புற மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளும் கைக்கொள்ளவேண்டும் என பரிந்துரை செய்யவும் காரணமாகின்றது. சாதனைகளோடு அர்த்தபூர்வமாகவும் நூற்றாண்டினை கொண்டாடும் யா/புற்றளை மகா வித்தியாலயம் அதனைச் சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல நூற்றாண்டு மலரை வெளிக்கொணர்வது பெருமைக்குரியதாக அமைகின்றது. யா/புற்றளை மகா வித்தியாலயத்திற்கு எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் (பா.உ), இராஜாங்க கல்வி அமைச்சர்.**

த்தைப்
பாசாலை
ண்டாடுப்
வமாகும்
ர்களுடன்
தறிப்பிட
தவதற்குப்
ுகளிலுப்
ற்றாண்டு

## பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் வாழ்த்துச்செய்தி



புற்றளை மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைப்பாகிய SDL 2006 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை செயலாளராகப் பதவி வகித்து வருவதனை இட்டு கொண்டாடப்படுகின்ற நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்துக்கூறும் கடமையினையும் பெருமையினையும் பெற்றுள்ளதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1916ஆம் ஆண்டு ஒரு கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு இக்கல்விக்கூடம் தவழ்ந்து, எழுந்து, வளர்ந்து புத்தம்புதிய கட்டடத்தொகுதிகளுடன் கம்பீரமாக நிமிர்ந்து நின்று காட்சியளிக்கும் நிலையைக் கண்டு இறும்பூதெய்தி நிற்கும் நான் இக்கூடம் நிகரில்லாப் பெருமையுடன் நீடுழி வாழ்கவென்று வாழ்த்தி நிற்கின்றேன்.

**பொ.கதிர்காமநாதன், செயலாளர், பாடசாலை அபிவிருத்திக்குழுபுற்றளை மகா வித்தியாலயம், புற்றளை, புலோலி.**

## ...கத்தான கல்விப் பணியைத் ...த்துகின்றோம்



தகின்ற
அணி
ச யின்
மராட்சி
றளைப்
ளக்காக
ள மகா
கல்விப்
னத்தின்
நூற்றாண்டு விழா மலரிற்குவாழ்த்துச்
றேன். புலோலி கிழக்கு கணபதியார்
ளால் வழங்கப்பட்ட காணியிலே
ா வித்தியாசாலை என்னும் நாமங்
/1961 இல் அரசுடைமையாக்கப்பட்டு
லயம் எனவும் 1968 இல் இருந்து புற்
அழைக்கப்பட்டு இன்றுவரை குறை
சமுதாயத்தில் மாணவர்களை நற்பிர
லவிளங்குகின்றது. இந்நூற்றாண்டு
கா வித்தியா லயத்தினால் வார்த்தெடுக்
ங்கைத்திருநாட்டின் கல்வி, நிதி, நிர்வாக
ளிலும் உயிரோட்டமாக உலாவுவத
வதனையும் காணலாம். ஆரம்பத்தில்
ட்ட பாடசாலை இன்று 375 மாணவர்
வரை 18 புகழ்பூத்த அதிபர்கள் இப்
மலான சேவையினைவழங்கியிருக்
ட்டும்நூற்றாண்டு விழா மலர் வித்தி
மயும் தொன்மையையும் நாளைய
திர மான பணியைஎடுத்தியம்பும்அச்சு
தூரநோக்கோடு மேற்கொள்ளப்படும்
விப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.
லய்பிரதேச செயலகம்/ருத்தித்துறை

## பல்லாண்டுகாலம் கல்விப் பணியாற்ற வாழ்த்துகின்றேன்



நூற்றாண்டு விழாவில் கால்பதித்து தளராத கல்விப் பணி தொடர் கின்ற யா/ புற்றளை மகா வித்தியா லயத்தின் நூற்றாண்டுவிழா மலருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த் துக்களை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட இவ்வித்தியாலயம் 1916 ஆம் ஆண்டு வராத்துப்பளை சாரதாபீடம் என்ற பெயரில் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட போதும் பின்னர் கனிஷ்ட இரண்டாம் தரப்பாடசாலை எனப்பெயர் பெற்று சிறப்பான கல்விப் பணியை வழங்கி இன்று புற்றளை மகா வித்தியாலய்ம் என்றபெயரில் புகழ்பூத்த பாடசாலையாகவளர்வதற்கு அரும் பணியாற்றிய கல்லூரி சமூகத்திற்கு எனது பாராட்டுக்கள். தனது நூற்றாண்டு வாழ்வில் யுத்தத்தாலும் சுனாமியாலும் இடம்பெயர்ந்த பெருமளவான மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த கல்லூரிக்கு எனது வாழ்த்துக்கள்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சி பிரதேசத்தையே வதைத்தெடுத்த Libiration Operation ஐ தொடர்ந்து புகழ்பூத்த ஹாட்லிக் கல்லூரி அன்னைக்கு அடைக்கலம் கொடுத்து வடமராட்சியில் கல்வியை அழியவிடாது பாதுகாத்த கல்லூரிக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாக வடக்கு மாகாணக் கல்வியமைச்சினால் வழங்கப்பட்டு வளர்ந்து வருகின்ற ஒன்றுகூடல் மண்டபத்துடன் கூடிய வகுப்பறைத் தொகுதியை ஒதுக்கீடு செய்த கௌரவக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அவர்களுக்கும் எனது நன்றிகள்.

கல்வியால் உயர்வடைந்து, அறிவால் வளர்ச்சியடைந்து மனிதநேயம் கொண்ட நம் மனிதர்களாக வாழ்ந்திட இக்கல்லூரி பல்லாண்டு காலம் கல்விப் பணி ஆற்றிட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.நந்தகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி**

## தனது சேவையின் மகிமையால் தன்னை நூற்றாண்டுப் பிள்ளையாக்கியுள்ளது



வடமாகாணத்தில் நூற்றாண்டு காணும் பாடசாலைகளுள் புற்றளை மகா வித்தியாலயமும் தனது சேவையின் மகிமையால் தன்னை நூற்றாண்டுப் பிள்ளையாக்கியுள்ளது.

கந்த முருகேசனாரும் அவரது வழித்தோன்றல்களும் வாழ்ந்த பிரதேசத்தில் இக்கல்லூரி அமையப் பெற்று நூற்றாண்டுகளாக தனது குழந்தைகளுக்கு அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளமை சிறப்பாகும்.

பெருமைக்குரிய ஆசான் கந்தமுருகேசனார் ஆற்றிய தமிழ்த்தொண்டை புற்றளை மகா வித்தியாலய மாணவர்களுடைய கல்விப் பெறுபேறுகளினூடாகக் கண்டு கொள்ளலாம். புற்றளை மகா வித்தியாலயத்துடைய வரலாற்றில் பண்டிதரது சேவையின் தாக்கம் பிரதிபலித்திருப்பதையும் இக்கல்லூரியின் வரலாற்றினூடாக கந்தமுருகேசனார் என்றென்றும் நினைவுபடுத்தப்பட்டவராக இருப்பார் என்பது உறுதி.

நூற்றாண்டு காணும் இவ்வேளையில் பல்லாண்டு காலமாக புகழ்பூத்த வடமராட்சியின் ஹாட்லிக் கல்லூரியை தன்னகத்தே அரவணைத்து மங்காத கல்வியை வடமராட்சி மாணவர்களுக்கு வழங்கிய பெருமை இக்கல்லூரிக்கே உரியதாகும்.

நூற்றாண்டு கால வரலாற்றில் இப்பள்ளி தலைமையேற்று நடத்திய அதிபர்களும் பெருமைக்குரிய ஆசான்களும் புகழ்பூத்த பழைய மாணவர்களும் இந்நூற்றாண்டை பெருமையுடன் எட்டிப்பிடிப்பதற்குத் துணை நின்றவர்கள் என்பதில் ஐயமில்லை.

புற்றளை மகா வித்தியாலயம் நூற்றாண்டைத் தாண்டிய இவ்வேளையில் மென்மேலும் தனது கல்விச் சேவையை ஒளிபரப்பி பிரதேச சிறார்களுக்கு கல்வியின் மகத்துவத்திற்கூடாக சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.த.குருகுலராசா, கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்.**

## நூற்றாண்டு வாழ்த்து

அறிஞர்களை உருவாக்கிய அன்னையே
புற்றளையில் அமைந்திருக்கும்
புனித வள ஆலயமே!
மாணவரை மதிக்க வைத்த
மகா வித்தியாலயமே!
வித்தை பல செய்திடவே
இங்கு வந்த பேரிடையே
கந்த முருகேசனார் எனும்
உத்தமனின் ஊற்றல்லவோ!
எத்தனைபேர் இங்கு உதித்தார்
ஏற்றமுறு செயல் புரிய!
அத்தனையும் உன்னிடத்தில்
அறிவை அள்ளிப் பெற்றவரே!
நொந்து மனம் போகாமல்
நோய் நொடிகள் அணுகாமல்!
ஐந்து கரத்தான் ஆனைமுகன்
அருகிலிருந்து காக்கின்றான்!
அன்புடனே அறிவு நிறை
அறிஞர்கள் சூழ்ந்திருக்கும்!
அழகான புற்றளையில்
அறிவூட்டும் ஆலயமே!
ஆண்டுகள் நூறாகையிலே
அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்!
தொண்டின்னும் தொடர்ந்திடவே
தூயவளை ஏத்துகின்றோம்!!

**கலாமோகன் குடும்பம்**



# சிறுவர் அரங்கம்

1465

# நம்பாதே!

...அடுத்த நாளே, அந்த மானைப் பிடிக்க வலை விரித்துவிட்டான். அந்த மான், வழக்கம்படி அன்றும் வந்தது பயிரை மேய்ந்தது. வகையாய் அங்கு விரித்திருந்த வலையில்.மாட்டிக் கொண்டது.

"ஐயையோ! இப்படி நேர்ந்துவிட்டதே இன்று!" உள்ளுக்குள் அலறியது. "உம். நம் நண்பனுக்குத் தெரிந்தால், எப்படியும் நம்மை விடுவித்துவிட மாட்டானா!' என்று நம்பிக்கையோடு இருந்தது.

எதிர்பார்த்தது போல், நரியும் அப்போது அங்கே வந்து, மான் வலையில் மாட்டிக் கொண்டு திண்டாடுவதைக் கண்டதும், "சரிதான்! இன்றுதான் நம் ஆசை நிறை வேறியது. இப்போது இதன் எலும்பையும், மாமிசத்தையும் சுவைத்துத் தின்னலாம்!" என்று அது எண்ணியபோதே, அதன் வாயில் எச்சில் ஊறியது.

ஆனால், நரியைக் கண்ட மானோ, மிகுந்த சந்தோஷப்பட்டது. "ஆ! நல்ல வேளையில் வந்தாய்! வலையைக் கடித்து அறுத்து உடனே என்னை விடுதலை செய்! நீ வரமாட்டாயா என்று இதுவரை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்! சங்கடத்தில் நண்பர்கள், உடையிழந்தவன் கை போல் உதவுவர் என்பதற்கிணங்க வந்திருக் கிறாய்!" என்று பரபரத்தது மான்.

"ஐயோ! நான் இன்று விரதமாயிற்றே! இந்தத்தோல் வலையை நான் தீண்டக் கூடாதே! நாளைக்கென்றால், நீ என்ன சொன்னாலும் கேட்பேன்," என்று பதை பதைத்தாற்போல சொல்லிற்று.



"என்ன, அப்படியா!" என்று மான் பரி தாபமாகப் பார்த்தது நரியை.

"என்ன! வெகு நேர மாகியும் இந்த மானைக் காணோமே!" என்று தேடிக்கொண்டு அங்கு வந்த காக்கை, அங்கிரு ந்த மானின் பரிதாப நிலை யைக் கண்டு திடுக்கிட்டது.

"நண்பா! எப்படி நேர்ந் தது இது? அநியாயமாய் இந்த வலையில் சிக்கிக் கொண்டு விட்டாயே!" என்று பச்சாதாபத்துடன் கேட்டது காகம்.

"அதையேன் கேட்கி றாய் போ! அன்று உன் வார்த்தையைக் கேளா மல் இருந்ததால் ஏற்பட்ட வினை இது!" என்று கண்க ளில் நீர் வழிய ஆழ்ந்த பெருமூச்சு விட்டது மான்.

"உன் நண்பன் எங்கே போனான்? அவனுக்குத் தெரிந்தால் உன்னை ஒரு நொடியில் விடுதலை செய்துவிடு வானே!"

"நன்றாய் சொன்னாய்! அவனாவது, என்னை விடுதலை செய்வதாவது! என் மாமிசத்தை ருசி பார்க்க இங்குதான் எங்கேயாகிலும் ஒளிந்து கொண்டிருப்பான்."

"உம்! உண்மை நண்பனுடைய பேச்சைக் கேளாதவனுக்கு விபத்து சீக்கிரம் வரும் என்பர். அது இப்போது உண்மையாகிவிட் டதே!" என்று, துக்கம் தொண்டையை அடைக்கச் சொல்லியது காக்கை.

அதற்குள் அந்தக் கொல்லைக்குச் சொந்த க்காரன், கையில் ஒரு குண்டாந் தடியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான்.

அதைக்கண்ட காகம், "நண்பா! நீ இப்போது மூச்சையடக்கிக் கொண்டு சவம் போல் கிட உன் கண்களை நான் கொத்து வது போல் நடிக்கிறேன். நீ இறந்து விட்டதாக எண்ணி, வலையை அவிழ்த்துச் சுருட்டி வேறு எங்கேயாகிலும் வைக்கப்போவான். அந்தச் சமயம் பார்த்து நான் குரல் கொடுக்கி றேன். நீ உடனே துள்ளிக் குதித்து ஓடிப்போய் விடு," என்றது.

"சரி!" என்று மான் மூச்சையடக்கிக் கொண்டு சவம் போல் கிடந்தது.

காக்காயை விரட்டிக்கொண்டே வந்து வேடனும் மான் இறந்துவிட்டதாக நினை த்தான். "பாவம்! அகப்பட்டுக்கொண்ட அதிர்ச்சியிலேயே இறந்துவிட்டது போலும்!" என்று பரிதாபப்பட்டுக்கொண்டு, வலையை அவிழ்த்துச் சுருட்டிக்கொண்டு சற்று எட்டி வைக்கச் சென்றான்.

உடனே காகம் குரல் கொடுக்க, மான் துள்ளிக் குதித்து ஓடத் தொடங்கிவிட்டது.

அது கண்ட கொல்லைக்காரன், "ஐயோ! ஏமாந்துவிட்டேனே!" என்று அவசர அவசர மாகத் தன் கையிலிருந்த குண்டாந் தடியை எடு த்து அந்த மானைப் பார்த்து வீசியெறிந்தான்.

அக்குண்டாந்தடி, சற்று தூரத்திலிருந்த புதரில் விழுந்து, அங்கு பதுங்கியிருந்த நரியைத் தாக்கவே, மண்டை பிளந்து அப்போதே அது உயிர் துறந்தது."(முற்றும்)

06.2016
24

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1314 - ஸ்கொட்லாந்துப் படைகள் இரண்டாம் எட்வேர்ட் தலைமையிலான இங்கிலாந்துப் படையினரைத் தோற்கடித்தனர். ஸ்கொட்லா ந்து தனது விடுதலையை மீண்டும் பெற்றது.
- 1509 - எட்டாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1571 - மணிலா நகரம் அமைக்கப்பட்டது.
- 1664 - நியூ ஜேர்சியில் குடியேற்றம் ஆரம்ப மானது.
- 1812 - ரஷ்யாவினுள் ஊடுரும் முயற்சியில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் நேமன் ஆற்றைக் கடந்தனர்.
- 1859 - சார்டீனிய இராச்சியம் மற்றும் பிரான்சின் மூன்றாம் நெப்போலியனின் படைகள் வடக்கு இத்தாலியில் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்தன.
- 1860 - புளோரன்ஸ் நைட்டிங்கேலின் எண்ண க்கருக்களுக்கமைய முதலாவது தாதிகள் பயிற்சி நிலையம் இங்கிலாந்தில் அமைக்க ப்பட்டது.
- 1894 - பிரெஞ்சு அரசுத் தலைவர் மரீ பிரான் சுவா சாடி கார்னோ படுகொலை செய்யப்பட்டார்.
- 1932 - சியாமில் (தாய்லாந்து) இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மன்னரின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைந்தன.
- 1938 - 450 மெட்ரிக் தொன் எடையுள்ள விண் கல் பென்சில்வேனியாவின் சிக்கோராவில் வீழ்ந்தது.
- 1940 - பிரான்சும் இத்தாலியும் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1948 - சோவியத் ஒன்றியம் ஜெர்மனியின் தமது கட்டுப்பாட்டிலுள்ள பெர்லினின் மேற்குப் பகுதியுடன் அமெரிக்க, பிரித்தா னிய, பிரெஞ்சுக்கள் வசம் இருந்த பகுதிக ளுடனான தரைவழித் தொடர்புகளைத் துண்டித்தது.
- 1956 - சே குவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டனர்.
- 1963 - சான்சிபாருக்கு உள்ளக சுயாட்சி வழங்கப்பட்டது.
- 1975 - அமெரிக்க விமானம் நியூயோர்க்கில் வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 1981 - 17 ஆண்டுகளாக உலகின் மிக நீளமான தொங்கு பாலமாக இருந்த ஹம் பர பாலம் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.
- 1983 - அமெரிக்காவின் முதலாவது விண் வெளி வீராங்கனை சாலி ரைட் தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு பூமி திரும்பினார்.
- 1997 - ஈழப்போர்: பன்றிகெய்தகுளம், பனிக்கநீராவிப் பகுதியில் ஜெயசிக்குறு படையெடுப்பின்போது இடம்பெற்ற தாக்கு தலில் 200 இராணுவத்தினரும் 90 விடுத லைப் புலிகளும் கொல்லப்பட்டனர்.
- 2002 - தான்சானியாவில் இடம்பெற்ற பெரும் தொடருந்து விபத்தில் 281 பேர் கொல்லப்பட்டனர்.
- 2004 - நியூயோர்க்கில் மரண தண்டனை சட்டபூர்வமற்றதாக்கப்பட்டது.
- 2007 - கராச்சியில் இடம்பெற்ற மழை மற்றும் சூறாவளியில் 200க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

### பிறப்புகள்

- 1883 - விக்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1964)
- 1907 - கா. அப்பாத்துரை, தமிழறிஞர் (இ. 1989)
- 1915 - ஃபிரெட் ஹொயில், அண்டவெளி உயிர் மூலவிகளை ஆய்ந்த வானியல் அறி வியலாளர் (இ. 2001)
- 1921 - **கண்ணதாசன், தமிழ்த்திரைப் படப் பாடலாசிரியர், கவிஞர்.**(இ. 1981)
- 1928 - எம். எஸ். விஸ்வநாதன், தென்னிந்திய இசையமைப்பாளர்.
- 1938 - நீல. பத்மநாபன், எழுத்தாளர்

### இறப்புகள்

- 1908 - குரோவர் கிளீவ்லாண்ட், ஐக்கிய அமெ ரிக்காவின் குடியரசுத் தலைவர். (பி. 1837)
- 2006 - சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், மணிக்கொடி எழுத்தாளர், திரைப்பட விமர்சகர. (பி. 1910)

## கண்ணதாசன்



கண்ணதாசன் புகழ் பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞரும் ஆவார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், நவீனங்கள், கட்டுரை கள் பல எழுதியவர். சண்டமாருதம், திரு மகள், திரை ஒலி, தென்றல், தென்றல்திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர். சாகித்ய அகாதமி விருது பெற்றவர். கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா. தமிழ்நாடு, சிறுகூடல்பட்டியில் தன வணிகர் மரபில் பிறந்தார். தாய் விசாலாட்சி ஆச்சி, தந்தை சாத்தப்பனார். இவருடன் உடன்பிறந்தோர் 8 பேர். சிறு வயதில் இவரை ஒருவர் 7000 ரூபாய்க்கு தத்து எடுத்துக்கொண்டார். அவர் வீட் டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார். ஐம்பதாவது வயதில் புலவர் வள்ளியம்மை என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்க ளுக்கு விசாலி என்னும் மகள் ஒருவர் உள்ளார். இந்து மதத்தில் பிறந்த வராயினும் மதவேற்றுமை கருதாமல் ஏசுகாவியம் பாடியவர். கம்பரின் செய்யுளி லும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் பாரதியாரை மானசீகக் குருவாகக் கொண்ட வர்.அண்ணாவின் திராவிட கழகத்தில் இருந்த கண்ணதாசன் 1961 ஏப்ரல் 9 இல் கருத்து வேறுபாட்டால் அக்கட்சியில் இருந்து வெளியேறி னார். உடல்நிலை காரணமாக 1981, ஜூலை 24 இல் சிகாகோ நகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஒக்டோபர் 17 சனிக்கிழமை இறந்தார்.

## இலங்கை; தீர்மானத்தை நிறைவேற்றுவதில்

# முன்னேற்றம் இல்லாததை சுட்டிக்காட்ட வேண்டும்

### ஐ.நா. ஆணையாளருக்கு மனிதவுரிமை அமைப்புக்கள் அவசர கடிதம்

(கொழும்பு)

**ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முன்னேற்றம் இல்லாத விடயங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தனது வாய்மூல அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்று அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் கோரியுள்ளன.**



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், எதிர்வரும் 27ஆம் திகதி, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர்செயிட்ராட்அல்ஹுசேன், கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பான வாய்மூல அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அறிக்கையில் இடம்பெறவேண்டிய விடயங்களைச் சுட்டிக்காட்டி, அனைத்துலக மனித உரிமை அமைப்புகள், ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

போரம் ஏசியா, பிரான்சிஸ்கன்ஸ் இன்ரநசனல், மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்துலக ஜூரிகள் ஆணைக்குழு, அனைத்துல வகையான பாகுபாடுகளுக்கும் எதிரான அனைத்துலக அமைப்பு, அனைத்துலக மனித உரிமைகள் சேவை ஆகிய அமைப்புகள் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளன.

கடந்த ஆண்டு பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், இன்னமும் நிறைவேற்றப்படாதுள்ள விடயங்கள், எந்தெந்த பரப்பில் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் குறைபாடுகள் உள்ளன, உடனடியாக நடைமுறைப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த வாய்மூல அறிக்கையில் சுட்டிக்காட்ட வேண்டும்.

பேரவையில் சமர்பபிக்கவுள்ள அறிக்கை மிகவும் முக்கியமானதாக இருக்கும் என்று நம்புகிறோம் என்றும் அந்தக் கடிதத்தில் மனித உரிமை அமைப்புகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.(இ-5)

# நிதி அமைச்சரை நாடாளுமன்றில் வைத்தே தாக்க வேண்டும்-அநுர



(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை நாடாளுமன்றில வைத்தே தாக்க வேணடுமென ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிழையான ஓர் அறிக்கையை சமர்ப்பித்த நிதி அமைச்சரை முழு நாடாளுமன்றமும் இணைந்து தாக்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு அறிகையின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டுக்கு நாடாளுமன்றம் அனுமதி வழுங்கிய தொகையை விடவும் அதிகளவு செலவிடப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தினால் இது குறித்து கண்காணிக்கப்பட்டுள்ளது.

கடன் எல்லையை மீறி அரசாங்கம் கடன் பெற்றுக் கொண்டுள்ளதனை கணக்காய்வாளர் நாயகம் தெளிவுபடுத்தியுள்ளது.

அவ்வாறான ஓர் நிலையில் அரசாங்கம் எவ்வாறு மேலதிக கடன் பெற்றுக் கொண்டது.

நிதி அமைச்சர் கணக்காயவாளர் நாயகத்தை விமர்சனம் செய்கின்றார், அவவாறு செய்ய அனுமதிக்க முடியாது.

நிதி அமைச்சரே இந்தத் தவறை இழைத்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நல்லிணக்க முயற்சிகளுக்கு ஏன் வெளிநாடுகளின் உதவியைப் பெற முடியாது?- நிர்மலநாதன் கேள்வி

(கொழும்பு)

நல்லிணக்க முயற்சிகளுக்கு ஏன் வெளிநாடுகளின் உதவியை பெற்றுக்கொள்ளப்பட முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுபபியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இந்தக் கேளவியை எழுப்பியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவினதும் இநதியாவினதும் ஊடக சுதந்திரம் பற்றி நாடாளுமன்றில் பேசப்படுகின்றது.

இந்திய தேர்தல் ஆணையாளருக்கு காணப்படும் அதிகாரம் பற்றி நாடாளுமன்றில் பேசப்படுகின்றது.

தமக்கு சாதகமான விடயங்கள் குறித்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளை உதாரணம் காட்டுகின்றனர்.

எனினும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளிடம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவத்ற்கு உதவி பெற்றுக்கொள்வது பற்றி பேச இவர்கள் விரும்புவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)



## இன்று ஒரு தகவல்

### தலைமுறை இடைவெளிகள்

மூத்தவர்கள் என்றாலே கர்நாடகப் பேர்வழிகள் என்றும்,நாகரிகத்தை நசுக்க நினைப்பவர்கள் என்றும் புதுமையை வெறுப்பவர்கள் என்றும் இளசு நினைக்க–

இளசுகள் என்றாலே அனுபவமற்றவர்கள் என்றும் நிதானம் புரியாதவர்கள் என்றும் முதுமை நினைக்க–

இந்தக் கிழங்களே இப்படித்தான்! சும்மா முணு முணுன்னு என்று இளசு நினைக்க–

இந்தப் பொடிப்பயலுக்கு என்ன தெரியும்? நான் பார்த்துப் பொறந்த பய என்று முதுமை நினைக்க–

தலைமுறைப் போராட்டங்கள் தலைதூக்க ஆரம்பித்து விடுகின்றன.

இளமை மீதான இளக்கார உணர்வு உடனடியாய் முதியவர்களிடமிருந்து களையப்பட வேண்டும். அவர்களிடத்திலும் விடயமிருக்கும் என எண்ண வேண்டும். அவர்களின் புதிய முயற்சிகளுக்கு வாய்ப்புக் கொடுத்தும் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தும் அவர்களது எல்லைகளை வரையறுத்தும் சக்தியை எடை போட்டும் வைத்துக்கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என இள இரத்தத்தைச் சிறுவட்டமிட்டுப் பூட்டிப் போட்டுவிடக்கூடாது. திறமைகளை வயது என்னும் அளவுகோல் கொண்டா அளப்பது?ஒருபோதும் கூடாது. தம்மைவிட ஒருமடங்கு அதிகமாகத் தாண்டும் வாரிசுகளைக் கண்டு வயதானவர்கள் பெருமைப்படலாமே தவிர,ஏன் பொறாமைப்பட வேண்டும்? வயது வேற்றுமையைப் பெரிதுபடுத்தாமல் அவர்களது வேகத்திற்குத் தாங்கலும் ஈடுகொடுக்க வேண்டுமேயொழிய தமக்கு முன்னால் ஓடுகிற இளசின் காலை இடறச் செய்யும் வேலையைச் செய்யக்கூடாது. முட்டுக்கட்டை போட நேர்ந்தால் அன்பினாலும் அக்கறையினாலும் அனுபவ முதிர்ச்சி கொண்டுவரப் போகும் தொல்லைகளைக் கணித்தறிந்துதான் முட்டுக்கட்டை போடுகிறேன் என்பதைத் தெளிவுபடுத்தி இது கௌரவப்போர் அன்று என்பதையும் விளக்கிவிட வேண்டும். நான் சொல்வதை நீ கேட்கத்தான் வேண்டும் என்று மேலோட்டமாகச் சொல்லாமல் ஏன், எப்படி,எதற்கு என்பதையும் விளக்கி இமையின் மனமுவந்த ஒத்துழைப்புடன் காரியத்தைச் சாதித்துக் கொள்வது பாராட்டுக்குரியது.

இளைய தலைமுறையும் எதற்கெடுத்தாலும் கௌரவப் போரைத் தொடங்காமல் மூத்தவர்கள் சொல்வது நம் நன்மைக்காகத்தான் என்பதை உணரவேண்டும். நோக்கம் உண்மையாய் இருந்து அதைச் சொல்லும் முறை சரியாக இல்லாவிட்டாலும் விளைவு கருதி அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். முணு முணுப்புகளைப் பொறுத்துக்கொள்ளும் மனப்பக்குவம் அவசியம் வேண்டும். முதுமை அனுபவமிக்கது. ஆயிரம் பிரச்சினைகளைக் கண்டது. எனவே தவறான கணிப்பு என்பது அவர்களை விட நமக்கே அதிகம் சொந்தம் என்பதை உணரவேண்டும். கௌரவப் பிரச்சினை அடிக்கடி குறுக்கிடுவதால் எதையும் கேட்டும் சம்மதம் பெற்ற பின்னும் தொடங்கலாம்.

முதுமை தீர்க்கமாய் மறுக்கும் விடயங்களை விட்டுக் கொடுத்துவிட்டு இளமை தன் திறமையை வேறு வகையில் புலப்படுத்தி முதுமையின் பாராட்டையும் தன்னம்பிக்கையையும் பெற வேண்டும். இளமை தன் மீதான நல்ல அபிப்பிராயத்தை நன்கு வளர்த்துக் கொண்டு விட்டால் முதுமை இளமையின் முயற்சிக்கு உறுதியாய் துணை போகும்

தங்களுக்குள் இருக்கும் இடைவெளிகளைக் குறைத்துக் கொள்வதோடு கௌரவப்போர்களையும் இளமையும் முதுமையும் கைவிடாவிட்டால்,ஒவ்வொரு வீடும் சந்தைக் கடையாகத்தான் இருக்கும்.

லேனா தமிழ்வாணன்

# மகசின் சிறைச்சாலையில் நெரிசல்

அதி முக்கியமானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் மகசின் சிறைச்சாலையில் நெரிசல் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

மகசின் சிறைச்சாலையில் 600 பேரை தடுத்து வைக்க முடியும் என்ற போதிலும் தற்போது 1114 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முக்கிய பிரபுக்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படும் போது அவர்களின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு அவர்கள் தனிச் சிறைகளில் அடைக்கப்படுகின்றனர்.

அல்லது சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைத்து அவற்றில் முக்கியமானவர்கள், பிரபுக்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு செய்வதனால் மேலும் சிறைச்சாலையின் சிறைக் கூடங்களில் நெரிசல் நிலைமை ஏற்படுகின்றது.

உதய கம்மன்பில மற்றும் மொஹமட் முஸம்மில் போன்றவர்கள் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு வெலிகடைச் சிறைச்சாலையில் 1600 கைதிகளை தடுத்து வைக்க முடியும் என்ற போதிலும் 2900 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைசாலை யில் 200 பேர் தடுத்து வைக்கப்பட முடியும் என்ற போதிலும் தற்போது 900 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-23.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.71 | 148.71 |
| பிரிட்டன் | பவுண்ட் | 213.73 | 221.34 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 163.20 | 169.71 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 149.99 | 156.28 |
| கனடா | டொலர் | 112.38 | 117.11 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.91 | 113.05 |
| சிங்கப்பூர் | டொலர் | 107.79 | 111.99 |
| இந்தியா | ரூபா | 2.1537 | ------- |
| சீனா | யுவான் | 22.0948 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 385.1866 |
| குவைத் | டினார் | 482.4459 |
| ஓமான் | ரியால் | 377.2678 |
| கட்டார் | ரியால் | 39.8984 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7308 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5459 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 80 | 60 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 75 | 90 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 700 | 500 | 600 | 600 | 600 | 600 |
| தக்காளி | 220 | 200 | 180 | 240 | 180 | 200 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 70 | 70 | 100 | 80 |
| கோவா | 180 | 200 | 120 | 160 | 160 | 160 | 200 |
| கரட் | 360 | 400 | 250 | 180-320 | 300 | 300 | 200 |
| பூசணி | 60 | 100 | 80 | 80 | 80 | 100 | 70 |
| புடோல் | 100 | 100 | 70 | 100 | 80 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 120 | 60 | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 140 | 100 | 160 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 400 | 200 | 240 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 100 | 120 | 100 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 120 | 200 | 100 | 120 | — | 160 | — |
| பயற்றங்காய் | 150 | 200 | 110 | 160 | 140 | 160 | 160 |
| லீக்ஸ் | 200 | 300 | 150 | 200 | 200 | 200 | 170 |
| பீற்றூட் | 140 | 200 | 150 | 240 | — | 200 | 150 |
| கறிமிளகாய் | 350 | 400 | 120 | 300 | — | 280 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 800 | 600 | 800 | 500 | 600 | 800 |
| போஞ்சி | 160 | 300 | 180 | 140 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | — | 60 | — | 80 | — |
| கீரை - 1பிடி | 30 | 50 | 10 | 30 | 30 | 20 | 10 |
| தேசிக்காய் | 200 | 300 | 150 | 140 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 30 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | 300 | 120 | 180 | — | 200 | 160 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | 240 | — | — | 300 |
| முள்ளங்கி | 100 | 200 | — | 100 | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 25 | 50 | 20 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | — | 60 | 80 | 80 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## அரசு—விடுதலைப்புலிகள் சமரசப்பேச்சில் முட்டுக்கட்டை 211

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பல்வேறு இடங்களில் பல கட்டங்களாக சமரசப்பேச்சுவார்த்தை நடந்தது.

யாழ்ப்பாணப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களை திரும்ப பெற வேண்டும், வெளியேறிய தமிழர்களை மீண்டும் குடியேற அனுமதிக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் வற்புறுத்தினார்கள்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால்தான் இராணுவம் வாபஸ் ஆகும், அகதிகளும் மீண்டும் குடியேற அனுமதி வழங்கப்படும் என்று இராணுவத் தரப்பில் கூறப்பட்டது.

### முட்டுக்கட்டை

ஆயுதங்களை ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர். இதனால் பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

4ஆவது சுற்று பேச்சுவார்த்தை பாங்கொங்கில் இருந்து 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நகோர்ன் பதோம் நகரில் 06-01-2003 அன்று தொடங்கியது.

அரசும் விடுதலைப்புலிகளும் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்களின் உரிமைகள் மற்றும் இராணுவ முகாம்கள் இல்லாத இடங்களில் யாழ்ப்பாணத் தமிழர்களைக் குடியமர்த்துவது ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### பாலசிங்கம் பேட்டி

பேச்சுவார்த்தைக்குப் பிறகு விடுதலைப்புலிகள் இயக்க ஆலோசகர் பாலசிங்கம் கூறியதாவது:-

விடுதலைப்புலிகளின் ஆயுதப் படைகளைக் கலைக்க வேண்டும் என்று அரசு தரப்பில் கூறப்படுவதை ஏற்கமுடியாது.

14-01-2003 அன்று நடக்க இருக்கும் ஸ்கான்டிநோவியின் மேற்பார்வையாளர்களுக்கான கூட்டத்தை நாங்கள் புறக்கணிப்போம்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏராளமான வீரர்கள் உள்ளனர். எனவே இதில் ராணுவம் கூறும் கோரிக்கையை ஏற்க முடியாது.

இவ்வாறு பாலசிங்கம் கூறினார்.

அரசு தூதுக்குழுத் தலைவர் ஜி.எல்.பீரீஸ் நிருபர்களிடம் கூறியதாவது:-

அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை பற்றி தனி நிபுணரின் கருத்துக்களை அறிவதற்காக காத்து இருக்கிறோம். பேச்சுவார்த்தை பற்றி அவரிடம் இருந்து நல்ல ஆலோசனைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஓய்வு பெற்ற இந்திய இராணுவத்தளபதி சதீஷ் நம்பியார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பீரீஸ் கூறினார்.

### வற்புறுத்த மாட்டோம்

போச்சுவார்த்தையின் முடிவில், இனப்போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ப்பகுதியில் மறுசீரமைப்புப் பணிகளுக்கான உலக நாடுகளின் நிதிக்காக உலக வங்கியைப் பாதுகாவலராக ஏற்றுக்கொள்வது என்றும் அரசும் விடுதலைப்புலிகளும் ஏகமானதாக ஒப்புக்கொண்டன.

இந்த நிலையில் அரசு, விடுதலைப்புலிகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று வற்புறுத்திவந்த நிலையை மாற்றிக்கொண்டது.

இதுபற்றி அரசின் தூதுக்குழுத் தலைவர் ஜி.எல். பீரீஸ் கூறுகையில்,

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் வரை விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக்கைவிட வேண்டும் என்று யாழ்ப்பாண இராணுவத் தளபதி பிறப்பித்த கட்டளையை அரசு வற்புறுத்தப் போவது இல்லை என்றார்.

### நோர்வே தூதுக்குழு

நோர்வே துணை வெளியுறவு அமைசர் விதர் ஹெல்கேசன் மற்றும் தூதுக்குழு உறுப்பினர் எரிக்சோல்கிம் ஆகியோர் 12-11-2003 அன்று ஜனாதிபதி சந்திரிகாவைக் கொழும்பில் சந்தித்துப் பேசினார்கள். முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அவர்கள் சந்தித்தனர்.

நோர்வே தூதுக்குழுவினர் ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி சென்றனர். அங்கு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசினார்கள். பூட்டிய அறையில் 2 மணி நேரத்துக்கு மேல் இந்தச் சந்திப்பு நீடித்தது.

பிரபாகரனுடன் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் எஸ்.பி. தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் அமைதி குழு டைரக்டர் எஸ்.புலிதேவன் ஆகியோர் இருந்தனர். நோர்வே துணை அமைச்சர் விதர் ஹெல்கேசனுடன் தூதுக்குழு உறுப்பினர் எரிக் சோல்கிம், நோர்வே நாட்டுக்கு கான கொழும்பு தூதர் ஜான் பராத்ஸ்கிர், தூதரின் 2ஆம் செயலாளர் தாமஸ் ஆகியோர் இருந்தனர். நோர்வே தூதுக்குழு பிரபாகரனுடன் சந்தித்துப்பேசியபோது பூட்டிய அந்த அறைக்கு வெளியே பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. விடுதலைப்புலிகளின் கொரில்லாப்படை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு இருந்தது.

### தூதுக்குழுவிடம் பிரபாகரன் உறுதி

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறமாட்டோம். அந்த ஒப்பந்தத்தை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடிப்போம் என்று நோர்வே தூதுக்குழுவிடம் பிரபாகரன் உறுதி அளித்தார். அதே நேரத்தில் கொழும்பில் நிலவிவரும் அரசியல் நிலவரத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருப்போம் என்றும் அவர் தூதுக்குழுவிடம் கூறினார்.






(தொடரும்)

# 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03.06.1930

ஆண்டவன் அடியில் 26.06.2006



திதி: பிரதமை 04.07.2016

## அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி (திரவியம்)

(இளைப்பாறிய பிரதம லிகிதர்- உணவுத் திணைக்களம், கொழும்பு)

ஆண்டுகள் பத்து போனதிங்கே- பப்பா
ஆறவில்லை துயரமிங்கே
அம்மாவை உங்கள் உடன் அழைத்து
மாதம் ஒன்று ஆகுது பப்பா
அம்மாவுக்கு நீங்களும் உங்களுக்கு அம்மாவும்
ஆறுதலாக இருங்கள் பப்பா!
சொல்லொணா துயரமுடன் உங்களிடம் வந்தா பப்பா
காத்திடுங்கள் அம்மாவை நெஞ்சு வெடிக்குது பப்பா
மண் மீது மீண்டும் எங்கள் குடும்பத்துக்குள்
வந்திடுங்கள் எம் தெய்வங்களே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"கௌரி பவனம்" வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி.

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 29.02.1929

ஆண்டவன் அடியில் 25.05.2016



திதி: அபரபட்ச சதுர்த்தி 24.06.2016

## அமரர் இராசபூபதி கந்தசாமி (திரவியம்)

அம்மா! கண்டீர்களோ பப்பாவை
சொன்னீர்களோ எம் துயரை- உம்துயரை
பெற்ற மகன் கொள்ளியின்றி பெண்பிள்ளைகள் கதற
வந்த கதை சொன்னீர்களா அம்மா!
தாயே உங்கள் பிள்ளைகளாய் பிறந்ததையிட்டு
என்றுமே பெருமை கொள்கிறோம் நாம்
தாங்க முடியவில்லை அம்மா!
பப்பாவிடம் எல்லாம் சொல்லி
ஆறுதல் அடையுங்கள் தாயே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் மறவாத மக்கள்- மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(இங்கிலாந்து, கனடா, சுவிட்சர்லாந்து)

(சி/4990)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 760

Search for people, places and things | Nagendram Home

புகழ்



நிஷாந்தன்



ராதை




கண்ணா

கணவன்:நீ கல்யாணத்துக்கு முன்னாடி
யாரையாவது லவ் பண்ணி
இருக்கியோ?...????
மனைவி:-(அமைதி)
கணவன்: அய்யோ தங்கம் ஹேர்ட்
பண்ணிட்டேனா???சாரி டி குட்டிமா.
மனைவி:என்னங்க எண்ணிட்டு
இருக்கும் போது
குறுக்க பேசாதீங்க...
இப்ப பாருங்க திரும்ப எண்ணனும்.

தேனுகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உறவுகளை இழந்த மனிதன் அநாதை! சொந்த தேசத்தை இழந்தவன் அகதி!

உறவுகளை இழந்த மனிதன் அநாதை! சொந்த தேசத்தை இழந்தவன் அகதி! எனக் கூறுவார்கள். அகதிகள் என்ற உடனேயே ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு தஞ்சம் புகுந்து கொள்வதையே மனதில் இருத்துகின்றோம்.

ஆனால், அகதி என்பது, இனம், சமயம், தேசிய இனம், குறிப்பிட்ட சமூகக் குழுவொன்றில் உறுப்பாண்மை, அரசியல் கருத்து என்பவை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டவரும் அவருடைய நாட்டுக்கு அல்லது சொந்த இடத்துக்கு வெளியில் இருப்பவரும் அந்நாட்டினுடைய பாதுகாப்பைப் பெற முடியாத அல்லது பயம் காரணமாக அவ்வாறான பாதுகாப்பை நாட விரும்பாதவருமான ஒருவரைக் குறிக்கும்.

மேலும், தன்னை அகதியாக ஏற்றுக்கொள்ளும் படி விண்ணப்பிக்கும் ஒருவர், அகதித் தகுதி கோருபவர் எனப்படுகின்றார்.

அந்த வகையில் இலங்கை மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் அகதிகள் என்ற போர்வையின் பேரில் தினம் தினம் அரங்கேறும் அவலங்களை அனைவரும் பார்த்த வண்ணமே உள்ளோம்.

உள்ளாட்டு யுத்தம், போர் சூழல், பாதுகாப்பு கருதி பலர் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். இதனால் அண்டைய நாடுகள் மட்டுமன்றி தாய் நாடும் சேர்ந்து பாதிக்கப்படுவதை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

இதற்கு சிறந்த உதாரணமாக அண்மையில் அவுஸ்ரேலியா செல்ல முற்பட்ட இலங்கை அகதிகள் இந்தோனேசியா கடற்பரப்பில் பட்ட வேதனைகளையும் எங்களை "சுட்டுவிடுங்கள்" என அழுது புலம்பியதையும் நாம் மறக்கவில்லை.

இவ்வாறு அகதிகளாக இவர்கள் தாய் நாட்டை விட்டு செல்ல முயற்சிப்பது ஏன்? உரிய அரசாங்கம் இதற்காக தீர்வை பெற்றுக் கொடுக்கின்றதா? அல்லது இவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுகின்றார்களா? என பல கேள்விகள் நம் மனதில் தோன்றிய வண்ணம் உள்ளன.

மேலும், 1990களில் வட புலத்திலிருந்து முஸ்லிம்கள் அப்பிரதேசத்திலிருந்து துரத்தப்பட்ட நேரம் சுமார் ஒரு இலட்சம் அளவில் இன்னும் அகதிகளாவேயுள்ளனர்.

இலங்கையை பொறுத்த மட்டில் 30 ஆண்டு யுத்தத்தால் சொந்த மண்ணிலேயே அகதிகளானோரும், அகதிகளாகப் புலம் பெயர்ந்தோரும் அனாதைகளானோரும் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள்.

இதன் காரணமாக தமிழர்கள் அகதிகளாக இந்தியாவின் தமிழ் நாட்டிலும் தஞ்சமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 1983 ஆம், 1989 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் அப்போது ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 53 பேர் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு வந்தனர் எனக் கூறப்பட்டது.

இவர்கள் அனைவரும் இராமேஸ்வரத்தில் உள்ள மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டனர். இவர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தற்போது 117 முகாம்களில் 75,738 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

மறுபுறமாக 2009 ஆம் ஆண்டு வட புலத்தில் நடந்த இறுதி யுத்தத்தின் போது சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாகியுள்ளனர்.

இதனடிப்படையில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் பல்வேறு போரகளால் அரசியல், சமூகச் சூழல்களால் அகதிகளாக அல்லலுறும் அகதிகளை நினைவு கூரும் வகையில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள், இசை நிகழ்ச்சிகள், நினைவஞ்சலி நிகழ்வுகளனைப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மிக அதிக அளவில் ஆபிரிக்கக் கண்டத்திலேயே அகதிகள் அதிகமாகவிருக்கிறார்கள். இதன் காரணமாக ஆரம்பத்தில் ஜூன் 20 ஆபிரிக்க அகதிகள் தினமாகத தான்நினைவு கூரப்பட்டது.

பின்னர் இத்தினமானது ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தீர்மானமொன்றின்படி, ஆபிரிக்க அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக, உலக அகதிகள் தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பல்வேறு மோதல் களுக்குள் சிக்கி அகதிகளாக தாம் வசிக்கும் நாட்டினுள், பிற நாடுகளிலை இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி வாழ்ந்துவரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இத்தினத்தின் முக்கியமான நோக்கமாகும்.

2000 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் சிறப்புத் தீர்மானமொன்றின்படி, அகதிகளுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தும் முகமாக, உலக அகதிகள் தினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆபிரிக்க அகதிகள் நாள் ஜூன் 20 இல் கொண்டாடப்படுவதால் இந்நாள் உலக அகதிகள் நாளாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் (UNHCR) ஒவ்வோர் ஆண்டும் இந்நிகழ்வுகளுக்கான கருப்பொருளைத் தீர்மானிக்கிறமையும் குறிப்பிடத்தக்கது.


பல்வேறு மோதல் களுக்குள் சிக்கி அகதிகளாக தாம் வசிக்கும் நாட்டினுள், பிற நாடு களிலை இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுக்குள்ளாகி வாழ்ந்துவரும் அகதிகள் பற்றிய விழிப்புணர்வினை உலக மக்களிடத்தில் ஏற்படுத்துவதே இந்நாளின் முக்கியமான நோக்கமாகும்.

(20 ஆம் பக்கம் பார்க்க...)









# மறைந்த இந்து நாகரிகப் பேராசிரியர் மூதறிஞர் இரா.வை.கனகரத்தினம்

ஸைவத் தமிழ்ப் பற்றாளரும் சிந்தனையாளரும் நாவலரின் புலமைத்துவம் தொடர்பாக ஏராளமான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தவருமாகிய பேராசிரியர் இராமநாதர் வைத்தியலிங்கம் கனகரத்தினம் அண்மையில் தமது 70 ஆவது வயதில் காலமானார்.

யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் ஏழாலையைப் புகுந்த இடமாகவும் கொண்ட இவர் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், யாழ். முத்துத்தம்பி வித்தியாலயம், செங்குந்தா வித்தியாலயம் என்பவற்றின் பழைய மாணவர். கொழும்பு பல்கலைக்கழகத்திலே இந்து நாகரிக பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

பேராசிரியர்களான ஆ. சதாசிவம், பொ.பூலோகசிங்கம் ஆகிய இருவரது வழிகாட்டலில் ஆறுமுகநாவலர் சைவத் தமிழுக்கு ஆற்றிய பணி எனும் தலைப்பில ஆய்வு செய்து எம்.ஏ. பட்டம் பெற்றவர். சைவப் பெரியார் இந்து போர்ட் சு.இராசரத்தினம் அவர்கள் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவர்.

முப்பது ஆண்டுகளுக்கு மேல் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் இந்து நாகரிகம் கற்பித்தவர். த்ரம் 6 தொடக்கம் க.பொ.த சா.த வரையிலான சைவ நெறிப் பாடத்திட்டம், ஆசிரியர் கைந்நூல் பாடநூல்கள் என்பனவற்றிற்கு 1997 ஆம் ஆண்டு தொடக்கம் ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கினார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்த இவர் இச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினருமாவார்.

பல நூல்களின் ஆசிரியர், பதிப்பாசிரியர், மலராசிரியர், கட்டுரையாசிரியர் ஈழத்தில் புராணபடனச் செல்வாக்கு ஓர் ஆய்வு (1985), ஏழாலை அத்தியடி புவனேஸ் வரி அம்பாள் ஆலய வரலாறு- ஒரு நோக்கு (1986), நாவலர் உரைதிறன் (1997), நாவலர் மரபு (1999), ஆறுமுக நாவலர் வரலாறு: ஒரு புதிய பார்வையும் பதிவும் (2001), பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் புலமையில்ஓர் ஆய்வு-(2004), இலங்கை தமிழறிஞர் நூல் வரிசை ஆகிய புகழ்பூத்த நூல்களின் ஆசிரியர்.

பதிப்புப் பணி என்ற வகையில் வே.கனகரத்தின உபாத்தியாயரான ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம் (1994), யாழ்ப்பாணம் வட்டு நகர் மகா வித்துவான் மு.ஆறுமுகம்பிள்ளை இயற்றிய சிறுத் தொண்ட நாயனார் புராணம் (2003)முதலானவை குறிப்பிடத்தக்கவை.

பேராசிரியர்கலாநிதி ஆ.சதாசிவம் நினைவுமலர்(1988), பேராசிரியர் சி.தில்லைநாதன் மணிவிழா மலர்( 1997) என்பவற்றின் ஆசிரியர் பேராசிரியர் சி.பத்மநாதனின் பத்மம் என்ற பாராட்டு மலரின் ஆசிரியர்களில் ஒருவர். பண்பாட்டியல்.(காலாண்டிதழ்) எனும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்.

பெருந்தொனையான அரிய சமய மற்றும் தமிழ் நூல்களையும் சுவடிகளையும் அரும்பாடு பட்டு சேகரித்து வைத்திருந்து



தக்க ஆதாரங்களுடன் எழுதிக் கொண்டிருந்த பெரும் சைவத்தமிழ்ப்புலமையாளனை நாம் இழந்து நிற்கிறோம். இவர் இழப்பு சைவத் தமிழுலகிற்கு ஈடு செய்ய முடியாதது.

**முருகேசு கௌரிகாந்தன்**
பேராசிரியரின் மாணவர், யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர்.

# சைவப்புலவர்,இளஞ்சைவப்புலவர் தேர்வில் வெற்றி பெற்றோர் விபரம்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்திய சைவப்புலவர் மற்றும் இளம் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்றோர் விபரம் வெளிவந்துள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் நி.தசீதரன் அறிவித்துள்ளார்.

செ.சாந்தரூபன் - 20 எல்லை வீதி செங்கலடி, க.கனகதுர்க்கா - ஏழாலை வடக்கு, த.உதயசங்கர் - உவர் மலைதிருகோணமலை, விஜஷ்ப லட்சுமி - றஞ்சன் வீதி, வெள்ளவத்தை, ச.உருத்திரேஸ்வரன்- அரியாலை, யாழ்ப்பாணம், மா.சத்தியவதனி - மாதுங்காவத்தைலேன், வெள்ளவத்தை.

இளம் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்றுள்ளோர் விபரம்,

ஜெ.ஜெயரூபி -யோகபுரம், கிளிநொச்சி, நா.சுஜீபன் - தவசிக்குளம், வவுனியா, மு.சற்சொருபவதி- கொட்டாஞ்சேனை, ந.றணிதா - பொலநறுவை, க.சிவகாயத்திரிநாயகி - சுன்னாகம், வே. சிவசுந்தரம் - மானிப்பாய், நி.தர்சிகா - கறுக்காய்த்தீவு, பூநகரி, ப.சுசிலா - முத்துக்கல், பொலநறுவை, ம.விமலகாந்தன் பொலநறுவை, செ.கஸ்தூரி - மாவிட்டபுரம், கு.டிலம்சன் - கண்ணகி புரம் மகிழ்லூர், மு.டயனரூபி - சுங்கான்கேணி, வாழைச்சேனை, க.யுகாந்தி, முத்துக்கல் பொலநறுவை, செ.தேவதாஸ், புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு, இ.ஜீவன்பிரசாந் - வேறகொட வெல்லம் பிட்டிய, மா.சறோஜினிதேவி- பம்பலப்பிட்டி, செ.உதயகௌரி- கேகிற்ற, வத்தளை, சி.மல்லிகா - ருத்திரா மாவத்தை, கு.கயல்விழி - கறுக்காய்தீவு, பூநகரி, யோ.உதயதர்சினி-சுங்கான்கேணிவாழைச்சேனை, மு.ஹீந்துஜா- நாவலடிக்கேணி, காரைநகர், இ.பிரிற்ஜினி - மாவடி வேம்பு மட்டக்களப்பு, தி.அழகேஸ்வரி - பெர்னாண்டோ வீதி, வெள்ளவத்தை. (இ-5)

# வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் சேவைகள்

வடக்கு மாகாண சுகாதார சேவைவழங்கலில்ஒருபங்காளியாக சுதேசமருத்துவத்திணைக்களம் செயற்படுகின்றது.

சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் 28 ஆயுர்வேத வைத்தியசாலைகளும் 34 சமூக சுகாதார மேம்பாட்டு பிரிவுகளும் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் 62 இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகளும் இயங்கி வருகின்றன.

இவற்றின் ஊடாக விசேட சிகிச்சை, பஞ்சகர்ம சிகிச்சை, சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பாரம்பரிய ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தலும் மீளப்பதிதலும் போன்ற செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

2015 ஆம் ஆண்டு 592,101நோயாளர் வருகை தந்து ஆயுர்வேத வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெற்றுள்ளனர். வடமாகாணத்தில் மேலைத்தேய வைத்தியத் துறைக்கு பெரும் சவாலாக அமைந்துள்ள தொற்றா நோய்களை வெற்றிகரமாகக் குணப்படுத்துவதில் சுதேச மருத்துவத்துறை பெரும் பங்கினை ஆற்றுகின்றது.

சுதேச மருத்துவத்துறையானது கூடிய வளங்களுடன் செயலாற்றின் தேசிய சுகாதார கொள்கை அமுல்படுத்தலிலும் தேசிய பொருளாதாரத்திலும் குறிப்பிட்டளவு பங்கினை வகிக்க முடியும்.

மாகாண சுதேச மருத்துவத்திணைக்களத்தின் கீழ் மாவட்ட ரீதியாக இயங்கும் நிறுவனங்களை மாவட்ட ஆயுர் வேத வைத்தியசாலைகள், கிராமிய ஆயுர்வேத வைத்திய சாலைகள், ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள், ஆயுர் வேத சமூக மருத்துவப் பிரிவுகள், மூலிகைத்தோட்டங்கள், மருந்து உற்பத்திப் பிரிவு ஆகியன இயங்குகின்றன. (இ

# புதிய பாடத்திட்ட திருத்த விளக்கமளிக்கும் செயலமர்வு

இந்து சமய அறநெறிக் கல்வியை மேலும் மேம்படுத்தி முன்னேற்றும் நோக்கில் இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித்திட்டம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தில் உள்ளடக்கியுள்ள இந்து சமய அறநெறிப் பாடசாலைகளுக்கான புதிய நடைமுறைகள் மற்றும் புதிய பாடத்திட்டம் என்பன தொடர்பாக கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களைச்சேர்ந்த இந்து சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் இந்து சமய ஆலய மற்றும் நிறுவனங்களின் நிர்வாக சபையினருக்கு விளக்க மளிக்கும் செயலமர்வு நாளை மறுதினம் 25 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு -04, இராமநாதன் இந்து மக ளிர் கல்லூரியில் (Dupilication Road, பம்பலப்பிட்டி) காலை 8.30 - 2.30 வரை இடம்பெறவுள்ளது.

அனைத்து அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், ஆலய மற்றும் இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகத்தினரை கலந்து கொள்ளுமாறும் இவை தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

# செய்தித்துளிகள்

## கிராமசேவையாளர் மீது பெண் ஒருவர் தாக்குதல்

பெண் கிராமசேவையாளர் ஒருவரை பெண் ஒருவர் தாக்கிய சம்பவம் வெலிப்பன பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

குறித்த பெண் தனது குடும்ப அட்டையில் தனது தங்கையின் பெயரைப் பதிவதற்காக கிராமசேவையாளரிடம் சென்ற போது அதற்கு கிராம சேவையாளர் குடும்ப அட்டையில் பெயர் பதிவதற்கான நாட்கள் முடிவடைந்து விட்டது என கூறியவேளை அப் பெண் கிராம சேவையாளரைத் தாக்கியுள்ளார். இது தொடர்பாக கிராம சேவையாளரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அப் பெண்ணை கைது செய்துள்ளனர். (இ-7)

## மோட்டர் மறைத்து வைத்தவர் பொலிஸாரால் கைதானார்

யாழ்.துன்னாலை சக்கு சம்பாதிப் பகுதியில் வீடு ஒன்றில் மோட்டரை மறைத்து வைத்திருந்தமை தொடர்பில் தலைமறைவான சந்தேக நபரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து தண்ணீர் இறைக்கும் மோட்டர் மீட்கப் பட்டிருந்தது. ஆனால் அவ் வீட்டார் தலைமறைவாகியிருந்தார். இருப்பினும் நேற்று முன்தினம் நெல்லியடிப் பொலிஸார் அந் நபரை கைது செய்திருந்தனர். (இ-60)

## 100 வயது முதியவர்கள் கௌரவிப்பு

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர் செயலகம் 100 வயதும் அதற்கு மேற்பட்டவர்களையும் கௌரவிக்கவுள்ளது. இதற்கமைய முதியவர்கள் வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ-60)

## ஆவணங்களைப் பெறலாம்

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாயைச் சேர்ந்த முத்துச்சாமி சசீகரன் என்பவரது 802701713 V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் B1 210049 D என்ற இலக்கமுடைய சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிப் பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் உடைமைகளை அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ள முடியும்.(இ-5)

## வெளிநாட்டு கைக்குண்டுகளுடன் அம்பலாங்கொடையில் ஒருவர் கைது

அம்பலாங்கொடை பிரதேசத்தில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் கஹவ பிரதேசத்தினை சேர்ந்தவர் என கண்டறியப்பட்டுள்ளது.(இ-5)

## சிறுநீரக நோயாளிகளை ஏமாற்றிய நபர் கைது

அக்குரஸ்ஸ பகுதியில் சிறுநீரக நோயாளிகளிடம் இருந்து பணம் சேகரித்த சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் அத்துரலிய பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் தன்னை ஒரு மதகுரு என கூறி. சிறுநீரக நோயாளிகளிடம் தொலைபேசி ஊடாக அழைப்பினை ஏற்படுத்தி சிறுநீரகம் நன்கொடையாக வழங்குவதாக கூறியே இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# டெங்குநோய்த் தாக்கம் வடமராட்சியில் அதிகரிப்பு

யாழ். வடமராட்சியின் சில பகுதிகளில் டெங்கின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளமையினால் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுரேஸ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமராட்சிப் பகுதிகளில் கடந்த ஆண்டு டெங்கின் தாக்கம் அதிகரித்திருந்தது. ஆனால் சுகாதாரப் பகுதியினரின் விழிப்புணர்வு நடவடிக்கை காரணமாக அது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போது மழை பெய்து வருவதன் காரணமாக சில பகுதிகளில் டெங்கின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ள தாகத் தெரிவித்த சுகாதார வைத்திய அதிகாரி இதனால் பொதுமக்கள் டெங்கு பரவும் இடம் என சந்தேகிக்கும் இடங் களை அழிக்குமாறும் தொட்டிகளில் தினம்தோறும் தண் ணீரை மாற்றுமாறும் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

நெல்லியடி சந்தையில் மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்யப்படுவதனால் பொதுமக்கள் பழங்கள் வாங்கும்போது அவதானமாக பார்த்து வாங்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (இ-60)

# தமிழ் சினிமா வரலாறு

## 190 சிவாஜி–பத்மினி நடித்த உணர்ச்சி மயமான படம் 'எதிர்பாராதது'

...அவரை கீழே கிடத்தி போர்வை ஒன்றை கொண்டு வரச் சொல்லி அவர் மீது போர்த்திணோம். கை கால்களையெல்லாம் தேய்த்து மேலே கொஞ்சம் சுடு தண்ணீர் தெளிர்த்தோ. அதன் பிறகு அப்படியே படுத்து விட்டார். எழந்திருக்கவே இல்லை அப்புறம் டாக்டரை வரவழைத்து. ஊசி எல்லாம் போட்டார்கள்.படப்பிடிப்பே இரண்டு நாட்கள் நின்று விட்டது

எதிர் பாராதது படத்தில் இந்த சம்பவம் நான் எதிர் பாராதது.

நான்தான் உதைபட்டவன். எனக்குத்தான் டிரீட்மெண்ட் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அடித்தவருக்குத்தான் முதலில் அவசரமாக ரீட்மெண்ட் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு சிவாஜிகணேசன் குறிப்பிட்டார்.

சிவாஜி கணேசன் புகழ் உயர்ந்தது கொண்டே போன சமயத்தில் அவர் திருப்பதிக்கு சென்றதால் தி.மு கழகத்தில் அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது

1955 ஆம் ஆண்டு காவேரி, முதல் திகதி, உலகம் பலவிதம், மங்கையர் திலகம், கோடிஸ்வரன், கள்வனின் காதலி ஆகிய 6 படங்களில் சிவாஜி நடித்தார்.

இவற்றில் மங்கையர் திலகம் மிகச் சிறந்த படமாக அமைந்தது. சிவாஜிக்கு சித்தியாக பத்மினி நடித்தார்.



இருவரும் நடிப்பில் முத்திரை பதித்தனர். குறிப்பாக பத்மினி தான் சிறந்த குணச்சித்திர நடிகை என்பதை நிருபித்தார்.

### பாணுமதிக்கு ஜோடி

கள்வனின் காதலி கல்கி எழுதிய பிரபல நாவல். இதில் சிவாஜியின் ஜோடியாக பாணுமதி நடித்தார். இருவரும் இணைந்து நடித்த முதல் படம் வெற்றிப்படம்.

மாறுபட்ட வேடங்களில் தன்னால் சிறப்பாக நடிக்க முடியும் என்று சிவாஜி நிருபித்துக் கொண்டிருந்த காலகட்டம் இது.

### திருப்பதி சென்றார்

இந்த சமயத்தில் சிவாஜி கணேசன் திருப்பதி சென்றார். அது தி.மு.கழகத்தில் புயலை உண்டாக்கியது.

திருப்பதிக்குச் சென்றது ஏன் என்பதை பின்னர் சிவாஜி விளக்கினார். அவர் கூறியதாவது,

நான் திராவிடர் கழகத்திலோ, தி.மு.கழகத்திலோ எந்தக் காத்தலும் சந்தா கட்டி உறுப்பினராக இருந்ததில்லை. பெரியாருடைய கொள்கைகளையும் அண்ணாவின் கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டேன். ஆகையால் அதைப் பிரசாரம் செய்வேன்.

அந்தக் கொள்கைகளை ஒத்துக் கொண்டேன் தவிர கட்சி உறுப்பினராக இருந்ததில்லை.

எனது குடும்பம் தேச பக்தி உள்ள குடும்பம். நாங்கள் எல்லாம் தேசிய வாதிகள். அத்தோடு நாங்கள் இந்து தர்மத்தை கடைப்பிடிக்கும் குடும்பத்தினர். மேலும் குடும்பத்தில் எல்லோரும் பக்தி மிக்கவர்கள் இவை அனைத்தையும் நான் உதறித் தள்ளி விடவில்லை. சில பகுத்தறிவுக் கொள்கைகள் எனக்கு சரி என்று பட்டது. அந்தக் கருத்துக்களை படங்கள் மூலம் சொன்னேன் அவ்வளவுதான்.

### புயல்நிதி

1956 இல் ஒரு புயல் வந்துது. பல இடங்களில் மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

புயல் நிவாரணத்திற்காக எல்லோரும் பணம் வசூலித்துக் கொடுங்கள் என்று அறிஞர் அண்ணா கூறினார். அப்போது நானும் சென்று வசூல் செய்தேன். விருது நகரில் தெருவில் சென்று, துண்டை விரித்து, பராசக்தி வசனம் பேசி, பணம் வசூல் செய்தேன். நிறையப் பணம் சேர்ந்தது. அதனை கட்சிக்குக் கொடுத்துவிட்டு படப்பிடிப்புக்காக நான் சேலம் சென்று விட்டேன். படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

### அழைப்பு இல்லை

அப்போது அதிகளவில் புயல் நிவாரண நிதி வசூலித்தவர்களுக்கு அண்ணா ஒரு பாராட்டுவிழா வைத்தார். சேலத்தில் இருந்த நான் சென்னையில் இருந்த என் தாயாருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்தேன். இன்று விழா நடக்கிறதே யாராவது எனக்கு அழைப்புக் கொடுத்தார்களா? என்று கேட்டேன். இல்லை என்று என் தாயார் கூறினார். (தொடரும்)

# உறவுகளை இழந்த மனிதன் அநாதை! சொந்த தேசத்தை இழந்தவன் அகதி!

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அன்றைய நாள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் பல்வேறு பேர்ர்களால் அரசியல், சமூகச் சூழல்களால் அகதிகளாக அல்லலுறும் அகதிகளை நினைவு கூரும் வகையில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள், இசை நிகழ்ச்சிகள், நினைவஞ்சலி நிகழ்வுகளெனப் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செயயப்படுகின்றன.

ஆனால் இந்த பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க யாரும் முன்வராததேன்?

அண்மைக் காலமாக இலங்கையிலும் இராணுவத்தீர்வினை அணுகு முறைகளால் பல்லாயிரக்கணக்கில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக அல்லலுற்று வாழ்ந்து வருகின்றார்கள்.

பலர் உயிரிழந்துள்ளனர், காணாமல் போயுள்ளனர்.

ஏற்கனவே இலங்கையில் நிலவிய யுத்தச் சூழல் காரணமாக இலட்சக் கணக்கில் ஈழத்தமிழர்கள் பூமிப்பந்தெங்கும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.



தொடரும் பாலஸ்தனத்து விடுதலை அமைப்புகள் மத்தியில் ஏற் பட்டுள்ள மோதல்களினால் பாலஸ்தீன மக்கள் பலர் அகதிகளாகியுள்ளனர்.



தொடரும் ஈராக், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் இராணுவ அணுகு முறையினால் இலட்சக்கணக்கில் மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

மேலும், பல இலட்சக் கணக்கில் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

சூடான், சோமாலியாவெனத் தொடரும் மோதலகளால் ஆபிரிக்கக் கண்டத்தின் பல பகுதிகளில் தொடர்ந்தும் அகதிகள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

உலகில்வாழும்அனைவரும் இவ்வாறு அகதிகளாகி போனால் எதிர் காலத்தில் தனது சொந்த நாட்டில் வாழ்வதற்கு மக்கள் இருப்பார்களா என்பது கூட கேள்விகுறிதான்?

அழகான இச்சிறு கோளினைச் சீரழித்து வரும் அனைத்து யுத்தங்களுமொழிந்து, உலகமெங்கும் சமாதானமும், அமைதியும், இன்பமும் மலர்ந்திட, அனைத்து அகதிகளின் வாழ்விலும் நல்லதோர் இன்பகரமான எதிர்காலம் பிறக்க இத்தினத்தில் வேண்டிக் கொள்வோம்.

நன்றி-இணையம்

மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்
என்று அந்தப் பேதை உரைத்தான்.
-பாரதியார்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சைவ சமயத்தைத் தாக்கினால் அது எம் தமிழைக் கொன்று விடும்

எமது தமிழ் மக்களின் வாழ்வில் காத்திரம் என்பது படிப்படியாகக் குறைந்து வருகிறது.

போர்க்காலச் சூழல் எம் இனத்தின் கட்டுமானத்தை மிகமோசமாகப் பாதித்துள்ளதால் எங்கள் பண்பாடுகள், கலாசார விழுமியங்கள் என்பன கட்டறுந்து சின்னாபின்னமாகிப் போனது என்ற வேதனை நம் அனைவரிடமும் இருக்கவே செய்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மண்ணில் மதம் பரப்பும் பயங்கரவாதமும் மதத்தின் பெயரால் ஆக்கிரமிப்புச்செய்கின்ற நாசகாரச் செயல்களும் மெல்லமெல்ல வளர்ச்சி கண்டு எங்களிடையே மோதலை ஏற்படுத்தி விடக்கூடியதான சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றது.

இத்தகையதொரு நிலைமைக்கு யார் சந்தர்ப்பம் அளித்தாலும் அது பேரழிவைத் தரும் என்பதே உண்மை.

மண் மீட்புப் போராட்டத்தை நடத்திய விடுதலைப் புலிகள் ஒருபோதும் மதவாதத்திற்கு இடம் கொடுக்கவில்லை. விடுதலைப் புலிகளின் எந்த முகாம்களிலும் கடவுள் படங்களோ சொரூபங்களோ அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டதான வரலாறு எதுவும் இல்லை.

அவர்களின் முழு நினைப்பும் எம் தமிழ்மொழியாகிய தமிழும் தமிழினமும்தான்.

ஆனால் தமிழர் தாயகத்தில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்கள் அனைத்திலும் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம்.

இராணுவத்தில் பௌத்தர்கள் மட்டுமன்றி கத்தோலிக்கர்களும் ஏனைய கிறிஸ்தவ அமைப்புகளைச் சார்ந்தவர்களும் பணியாற்றுகின்ற இலங்கையில் உள்ள அனைத்து இராணுவ முகாம்களிலும் புத்தர் சிலைகள் மட்டுமே அமைக்கப்பட்டிருக்கும்.

இராணுவ முகாம்கள் எங்காவது யேசுபிரானின் சுருவம் அல்லது திருச்சிலுவை அமைக்கப்பட்டிருப்பதை காணவே முடியாது. எனினும் சிங்களக் கத்தோலிக்கர்கள் இதனை எதிர்க்கவில்லை ஏனெனில் தமது தாய்ச் சமயம் பௌத்தம் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்-இருக்கின்றனர்.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்று சிங்களக் கத்தோலிக்கர்களும் சொல்லுகின்ற மனநிலையைக் கொண்டிருப்பதால்தான் இன்னமும் இலங்கையில் பௌத்த சிங்கள ஆட்சி என்ற உத்வேகம் தென்பகுதியில் உரம் பெற்றுள்ளது.

ஆனால் தமிழர்கள் என்றாலே அவர்கள் சைவம் தான் என்றிருந்த நிலைமை அந்நியர் ஆட்சியில் குலைந்து கட்டாயத்தின் அடிப்படையிலும் கல்வி, உத்தியோகம் என்ற தேவையின் காரணமாகவும் மதமாற்றம் என்பது நடந்தேறியது.

எனினும் எதனையும் ஏற்றுக் கொள்கின்ற சைவ சமயம், கத்தோலிக்கத்தை அனுசரித்தது. கத்தோலிக்க சமயம் சார்ந்தவர்களுக்கும் தாய்ச் சமயம் சைவம் என்பதால் நம் முன்னவர்கள் சைவத்திற்கு எத்தீங்கும் இழைக்கலாகாது என்பதில் உறுதியாக இருந்தனர்.

ஏனெனில் சைவ சமயத்திற்கு தீங்கு இழைக்கப்படுமாயின் அதன் விளைவு தமிழ்மொழியை பாதிப்பதாக அமையும் என்ற உண்மைய அவர்கள் உறுதியாக அறிந்திருந்தனர்.

ஆனால் இன்றைய நிலைமை அதுவன்று. எனவே இந்நிலைமை தமிழை அழித்துவிடுமே என்ற அச்சத்தை தருகிறது.

சைவ சமயத்தவர்களும் கத்தோலிக்கர்களும் இதர கிறிஸ்தவ அமைப்புச் சார்ந்தவர்களும் உறவினர்களாக இருக்கின்ற எங்கள் தமிழர் தாயகத்தில் நம் எல்லோருக்கும் தாய்ச் சமயமாக இருக்கக் கூடிய சைவ சமயத்தைப் பாதுகாப்பது தமிழைப் பாதுகாப்பதற்கு ஒப்பானது என்பதால், எந்த விதமான மத பேதமும் இன்றி எம் தமிழை வளர்க்கப் பாடுபடுவோம். அதுவே இன்றைய தேவை.

# ஆங்கில தினப் போட்டி வலயங்கள் மாற்றப்பட்டன

2016 ஆம் ஆண்டுக்கான மாகாணமட்ட ஆங்கிலதின போட்டிகள் நடைபெறும் வலயங்கள் மாற்றப்பட்டுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளா செ.உதயகுமார் அறிவித்துள்ளார். தேசிய மட்டத்துக்கு செல்லும் சகல எழுத்தாக்கப் போட்டிகளும் எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ் வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இஸ்லாமிய மாணவர்களுக்கு நோன்புநாள் காலம் என்ற படியால் எதிர்வரும் 27 ஆம் திகதி மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரியில் மன்னார் மற்றும் மடுவலய மாணவர்களுக்கும், வவுனியா வலயக்கல்வி அலுவலகத்தில் கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு வலய மாணவர்களுக்கும், யாழ் வேம்படி பெண்கள் உயாதர பாடசாலையில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவக வலய மாணவாகளுக்கும் எழுத்தாக்கப் பரீட்சை நடைபெறும் என அறிவித்துள்ளார். (இ-9)

# விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கான கருத்துகள்-07 அன்பின் சுயரூபம்

அன்பு என்ற வார்த்தை எத்தனையோ மனங்களில் எத்தனையோ விதமான எண்ண அலைகளை உருவாக்குகின்றது. இந்த வார்த்தையின் தாக்கம் இல்லாத மனித வாழ்க்கையே கிடையாது என்றால் அது மிகையாகாது. உறவை உருவாக்குவதே அன்பு தான். மேலும் அது உறவுகளைப் பலப்படுத்துகிறது. பாதுகாக்கிறது. ஆனால், இதே அன்பு எனது அறிவுக்கண்ணை மூடிவிடும் அளவுக்கு சமநிலை இழக்கும் போதே, பாசம் கண்ணை மறைத்து விட்டது என்கிறோம்.

எனது மனசாட்சியின் விரோதியாக என்னை மாற்றி, எனது மனச்சாட்சியின் இஷ்டத்திற்கு என்னை வாழ விடாது தடுக்கும் பந்தங்களாக நமது உறவுகளே வடிவெடுப்பதும் உண்டு. மனிதர்கள் பலர் தன்னலத்திற்காக அன்றி தனது சொந்தங்களின் நலத்திற்காகப் பாடுபடும் போது, அறிந்தோ அறியாமலோ பல பாவ காரியங்களையும் செய்யத் துணிகின்றனர். வினை விதைத்தவன் தினை அறுக்க முடியாதே. எத்தகையதொரு தூண்டுதல் காரணமாக நான் இயங்கியிருந்தாலும் தகாத செயல்களின் பலனை அனுபவிக்க வேண்டியது நான் தான் என்பதே உண்மை.

அத்துடன், மனித வாழ்க்கைக்கு மேலும் இனிமை சேர்க்க வேண்டிய உறவுகள் சிலசமயங்களில் கசப்பான அனுபவங்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. நாம் அனுபவித்த, அனுபவிக்கின்ற துயரங்கள் சிலவற்றை, அலசி ஆராய்ந்து பார்த்தோமானால், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நம் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரியவர்களே அதில் சம்பந்தப்பட்டிருப்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

இங்கே, அன்புக்குரிய உறவின் பிரிவே துயரத்திற்குக் காரணமாகின்றது. நம்மால் மிகவும் நேசிக்கப்படுகின்ற நமது உறவொன்றே, எதிர்காலத்தில் நாம் சொல்லொணாத் துயரமடைவதற்குக் காரணமாகப் போகின்றது என்பதை நமது வாழ்விலே சில சம்பவங்கள் இடம்பெறுகின்ற வரை, நம்மால் உணர முடிவதும் இல்லை. அன்பென்ற நீரூற்று, மனிதனுக்குத் துன்பம் தரக்கூடிய சாத்தியக்கூறுகளே கிடையாது. அன்பால் சிருஷ்டிக்கப்படுவது இன்பமானதோர் உலகமேயாகும். சுயநலமே துயரத்தின் காரணி.

**சுகதாமம் (கலட்டிச் சந்திக்கு அருகே பிறவுண வீதியில்) மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார் செய்யும் பொருட்டு இக்கருத்துகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 077-2612 088, 077-221 5102 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.**

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### குத்திப்பேசுவது ஆகாத செயல்

❖ படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். அவற்றை நேசிப்பவனே இறைவனை நேசிப்பவனாவான்.

❖ இறைவன் ஒருவனே! அவனே அகிலத்தையும், அகிலத்தாரையும் படைத்தான். எனவே, அனைத்து நாடுகளும், அனைத்து மனிதர்களும் சமமே. இறைவனின் வழிகாட்டுதலும் அனைவருக்கும் பொதுவானதே!

❖ உன் சகோதரனின் துன்பத்தைக் கண்டு மகிழாதே! இறைவன் அவன் மீது கருணை புரிந்து, உன்னைத் துன்பத்தில் ஆழ்த்திவிடுவான்.

❖ இறைநம்பிக்கையாளர்களே, எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கலாம். எந்தப் பெண்களும் மற்றெந்தப் பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம். நீங்கள் ஒருவரையொருவர் குத்திப் பேசாதீர்கள். ஒருவருக்கொருவர் பட்டப்பெயர்களைச் சூட்டி அழைக்காதீர்கள்.

❖ இறைநம்பிக்கை கொண்டவர்களே! தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தியை உங்களிடம் கொண்டு வந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்து தெளிவு படுத்திக் கொள்ளுங்கள்.

**வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**

# அவசர கலந்துரையாடல்

வலி.வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வுச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கிடையிலான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. குறித்த அவசர கலந்துரையாடலில் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலி. வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வு சங்க தலைவர் அ.குணபாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ-9)

# புகைப்பொருட்களுக்கு எதிராக சங்கானையில் 7 வழக்குகள் பதிவு

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போது புகைப் பொருட்களுக்கு எதிராக 7 வழக்குகள்பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புகைத்தல் மற்றும் மதுபான பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது பொது இடத்தில் புகைத்தல் மேற்கொண்டதற்கு எதிராக 2 பேருக்கும் சுகாதார எச்சரிக்கை இல்லாமல் புகையிலைப் பொருடகள் விற்பனை மற்றும் காட்சிப்படுத்தியமைக்கு எதிராக 3 பேருக்கும் வெற்றிலைக் கூறினுள் புகையிலை வைத்து விற்ற குற்றத்துக்காக 2 பேருக்கும் எதிராக மொத்த மாக 7 வழக்குகள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. (இ-9)

# மாணவனைக் காயப்படுத்திய ஆசிரியருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சாவக்சேரி பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவரை அடித்துக் காயப்படுத்திய குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட ஆசிரியரை எதிர்வரும் யூலை மாதம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதிநந்த சேகரம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் உயர் தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை அதே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கடந்த 15ஆம் திகதி கன்னத்தில் அறைந்துள்ளார்.

இதன்போது குறித்த மாணவனின் காதில் இரத்தம் வடிந்து உடல் நிலை பாதிப்படைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இது தொடர்பாக மாணவனின் பெற்றேரால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் குறித்த ஆசிரியரை பொலிஸார்கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

அதன்போதே எதிர்வரும் யூலைமாதம் 7ஆம் திகதி வரை ஆசிரியரை விளக்க மறியலில்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(செ-9,89)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **யாழ்.பிரதேசத்தில** மயிலங்காடு, குப்பிளான், தெல்லிப்பழை வைத்திய சாலை, தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலை, இலங்கை நாயகி அம்மன் கோவிலடி கல்வியங்காடு ஆகிய இடங்க ளிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** ஆனந்த புரம், உதயநகர், தொணடமாநகர், விவேகானந்த நகர், கிருஸ்ண புரம், கனகாம்பிகைக்குளம் இரணைமடு, முறிகண்டி, அறிவியல்நகர், கொக்காவில் விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்றட், மத்திய வங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active, யுனிச் செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargi ll's Agri foods, இராணுவ பாசறை I மற்றும் II, இராணுவபாசறை, 7ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத தொடர்பு நிலையம, கிளிநொச்சிவைத்திய சாலை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** இராசேந்திரகுளம், சூடு வெந்தபுலவு, மடுக்கந்தை யிலிருந்து குடாகச்ச கொடி வரை, T.N. N ஆலைஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும். (இ-9)

# இளந்தென்றலை வெற்றி கொண்டது பனங்கட்டிகொட்டு சென்.ஜோசப் வி.க.



பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட் டியில் முல்லைத்தீவு இளந்தென்றல் வி.கழகத்தை எதிர்த்து பனங் கட்டிகொட்டு சென்.ஜோசப் விக. மோதியது.

போட்டியின் 01 ஆவது நிமிடத்திலேயே இளந்தென்றல் வி.க.முதலாவது கோலினை அடித்து அதிர்ச்சியளித்தது. ஆட்டத்தினை சுதாரித்துக்கொண்டு ஆடிய சென். ஜோசப் வி.க. பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் கோல் பெறும் வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டன.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் தமது ஆட்ட வியூகத்தினை மாற்றி வீரர்களை முன் நகர்த்தி ஆடிய சென்.ஜோசப் வி.க. 49 ஆவது நிமிடத்தில் கிடைத்த மூலை உதையினை நட்சத்திர வீரர் டிக்கோனி உதையில் டியூக் தலையால் முட்டி கோலாக மாற்றினார். தொடர்ந்து 51 ஆவது நிமிடத்திலும் கிடைக்கப் பெற்ற மூலை உதையினை டிக்கோனியின் அனுபவ உதை மூலம் கிளின்ரன் தலையால் இடித்து அழகாக கோலாக்கினார்.

பந்து பரிமாற்றங்களை சிறப்பாக மேற்கொண்ட சென்.ஜோசப் ரெக்சன் 71 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலினை பெற்றது.

ஆட்டத்தின் அடுத்த நிமிடத்தில் இளந்தென்றல் வி.க. வினோத் சென்.ஜோசப் பின்கள வீரர்களை இலாபகமாக கடந்து கோலினை அடித்தார். பதிலுக்கு 81 ஆவது நிமிடத்தில் டிக்கோனிங் மேலும் ஒரு கோலினை அடிக்க ஆட்ட நேர முடிவில் 4:2 என சென்.ஜோசப் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.ஜோசப் வி.க நட்சத்திர வீரர் டிக்கோனிங் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க நலன் விரும்பி சு.பத்மசுந்தரம் வழங்கி கௌரவித்தார். (க)





## எவரெஸ்ட் வி.க. உதைபந்தாட்டம்

எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி வரிசையில் 18. 06. 2016 (சனி) நடைபெற்ற முதலாவதுபோட்டியில் நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழகத்தினை எதிர் தாடிய வலைப்பாடு ஜெகமீட்பர் 2:0 என்ற கோல் அடிப்படையிலும் 2 ஆவது போட்டியில் யாழ்.பல் கலையினை எதிர்த்தாடிய வலைப் பாடு சென்.ஆன்ஸ் வி.க.(0:0) என்ற கோலினை பெற்றதால் சம நிலை தவிர்ப்பு உதையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. (க)

## சக்குறோ சோட்டாக்கான் மாணவர்கள் கராத்தே போட்டியில் சாதனை



மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் 15 தங்கம் உட்பட 80 இற்கு மேற்பட்ட பதக்கங்களை பெற்று சக்குறோ சோட் டாக்கான் கராத்தே பயிற்சி கழகம் (S.S .K.A) சாதனை படைத்துள்ளது.

வீர, வீராங்கனைகள், பிரமுகர்கள் ,நடுவர்கள் மற்றும் கழக பிரதம ஆசிரியர், பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜையும் (S.S. K.A) படத்தில் காணலாம். வெற்றிபெற்ற அனைத்து மாண வர்களும் எதிர்வரும் மாகாண மட் டம், தேசிய மட்ட போட்டிக்கு தகுதி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வலைப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

அரியாலை சனசமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு நிகழ்வை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி 2016 ஜூலை மாதம் 2,3 ஆம் திகதி (சனி, ஞாயிறு) திகதிகளில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் பங்கு பெற விரும்பும் கழகங்கள் விண்ணப்பப் படிவங்களை 28.06.2016 இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பப் படிவங்களை விளையாட்டுப் பொறுப்பாளர் ஐ.கணேசபாலன் என்பவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தொடர்பு 077 601 3550. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## விளைபூமி வி.கழக உதைபந்தாட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக்கழகம் நடத்தும் இறந்தவர்கள் ஞாபகார்த்தமான மாபெ ரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை 25 ஆம் திகதி தொடக்கம் 3 ஆம் திகதி வரை விளைபூமி விளையாட்டுக்கழகத்தில் நடைபெறவுள்ள இந்த போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து உதைபந்தாட்ட கழகங்கள் பங்குபற்றுகின்றன. (க)

## இன்றைய போட்டிகள்

ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றுவெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டியில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சோமாஸ்கந்தன் விளையாட்டுக்கழகமும் இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் கச்சாய் வொலி கிற்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ் வதி விளையாட் டுக்கழகமும் இரவு 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகம் மோதவுள் ளது.

❖❖❖❖❖❖❖❖

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தாச்சி சுற்றுப்போட்டி அரியாலை காந்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை 6.30 மணியளவில் மின்னொளியில் நடைபெறும் போட்டியில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகமும் இரவு 7.30 மணியளவில் நடைபெறும் போட்டியில் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன. (க)

## தங்கராசா குயின்சிகா தேசிய மட்டத்திற்கு தெரிவு



இலங்கை தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட தடகள போட்டிகளில் பங்குபற்றி 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் பிரதேச மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றதோடு (19.06.2016) நடைபெற்ற மாவட்ட மட்ட போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார் செல்வி.தங்கராசா குயின்சிகா (க)

## திக்கம் உதைபந்தாட்ட தொடர் இறுதிப்போட்டியில் விண்மீன்

திக்கம் உதைபந்தாட்ட தொட ரின் இரண்டாவது பரபரப்பான அரையிறுதியில் பலாலி விண்மீன் மற் றும் இளவாலை யங்கென்றீஸ் அணி கள் மோதின. ஆட்ட நேர முடிவில் எவ்வித கோல்களும் இன்றி போட்டி சமநிலையானதால் தண்ட உதை முடிவில் விண்மீன் அணி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

இறுதியாட்டத்தில் விண்மீன் அணி யாழ்.சென்.மேரிஸ் அணி யினை எதிர்த்து மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## துஷ்பிரயோகங்களை...

நேற்றைய தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஐம்பத்து ஐந்தாவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன்போதே உறுப்பினர் அஸ்மினால் குறித்த பிரேரணை முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கில் தற்போது என்றும் இல்லாதாவாறு சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலை தற்போது பாடசாலைகளிலும் காணப்படுகின்றது ஆகவே இவற்றை கட்டுப்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் இதற்காக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், கல்வி அமைச்சர், உறுப்பினர்கள், சிறுவர் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் ஆகியோரினை ஒன்றிணைத்து விசேட குழு ஒன்றினை அமைத்து சிறுவர் மீதான துஸ்பிரயோகங்களை கட்டுப்படுத்தல் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானம் தொடர்பில் முதலமைச்சருக்கு தெரியப்படுத்தி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது என அவைத்தலைவர் தெரிவித்தார். (செ-4)

## பொருளாதார...

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்திட்டத்தினூடாக ராஜா பிளாசா மாதிரிக் கிராமம் 15 வீட்டுத் திட்ட திறப்புவிழா நேற்றைய தினம் நவக்கிரி புத்தூர் தெற்கு, மஸ்கன் வீதியில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சென்ற திங்கட்கிழமை மத்திய அமைச்சரவை அமைச்சர்களுடன் மற்றைய மாகாண முதலமைச்சர்களுடன் ஜனாதிபதி முன்னிலையில் ஒரு கூட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது. கூட்டத்திற்குச் சென்றதுந்தான் தெரிந்தது வட மாகாணம் சம்பந்தமாக அங்கு ஒரு சதி நடைபெற இருந்தது என்பது. நான் சென்றதால் சதி அம்பலமானது.

வடமாகாணம் நோக்கி எமக்கு பொருளாதார மையமொன்றைத் தருவது போல் இதுகாறும் பெரிதாகக் கூறி வந்த கிராமிய பொருளாதார அமைச்சர் தன் உள்ளக் கிடக்கையை அன்று வெளியிட்டுவிட்டார். நான் அன்று வருகை தர இருந்ததை அவர் எதிர் பார்க்கவில்லை. அதாவது வடமாகாண மக்களால் பொருளாதார மையத்தை எங்கு நிறுவலாம் என்பதில் ஸ்திரமான நிலைப்பாடு ஒன்று இல்லாததால் அதனை மதவாச்சியில் அமைக்க வேண்டும் என்று கேட்டு நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் வேறு விடயங்கள் என்ற தலைப்பின் கீழ் தமது கருத்தைத் தெரிவித்தார். இதற்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீனும் ஒத்துப் போனார் போல் தெரிந்தது.

நான் விளக்கமாகக் கூறினால், பொருளாதார மையம் வவுனியாவில் நிறுவுவது சம்பந்தமாக எமக்கு அறிவிக்கப்பட்டதும் ஐந்து இடங்களை அடையாளம் கண்டு அவற்றில் எது சிறந்தது என்று நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்துக் கேட்டோம். அவர்கள் தாண்டிக்குளத்திலும் மற்றைய மூன்று இடங்களிலும் அமைப்பது கூடாது என்றும் ஓமந்தையில் அமைப்பதே சிறந்தது என்றும் கருத்து வெளியிட்டார்கள்.

தாண்டிக்குளத்தில் அமைத்தால் எமது விவசாய கல்லூரியும் விவசாயப் பண்ணையும் பாதிக்கப்படும் என்று கூறினார்கள். வேறு பல காரணங்களையும் முன்வைத்தார்கள். எனவே நான் ஓமந்தையில் நிறுவுமாறு அமைச்சரிடம் கேட்டிருந்தேன். அதன் பின் நான் பங்குபற்றாமல் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ரிஷாட் பதியுதீன் தாண்டிக் குளத்தில் நிறுவ வேண்டும் என்று கூறி முடிவு எடுக்க வைத்தார். இந்தப் பிரச்சினையைத் தொடக்கி விட்டவரே அவர் தான்.

இது பிரச்சினையாகியவுடன் பொருளாதார மையத்தை இழக்கக் கூடாதென்ற காரணத்தினால் நான் அமைச்சர் ஹரிசனைப் போய் நேரில் சந்தித்தேன். அவர் தாண்டிக்குளமும் ஓமந்தையும் தூரமாய்ப் போய்விட்டன. வவுனியா நகரத்தினுள் ஒரு இடம் தரவேண்டும் என்று கேட்டார். இதற்கு வடக்கு நோக்கி அமைதலே உசிதம் இது வடக்குக்குக் கிடைக்க வேண்டிய மையம். எனவே மாங்குளத்தில் அமைப்பதே சிறந்தது. அப்படி இல்லை என்றால் வவுனியாவின் வடக்கில் இருக்கும் ஓமந்தையே சிறந்தது என்று கூறிப்பார்த்தேன்.

அமைச்சர் ஒரேயடியாக நகரத்தினுள் இடந தாருங்கள் என்று விடாப்பிடியாகக் கேட்டார். எனவே ஒரு வாரத்தினுள் நான் அவர் கேட்டவாறு ஏ-9 பாதையில் இ.போ.ச பஸ்நிலையத்திற்குப் பின்புறமாக மதவுவைத்த குளத்தில் ஐந்து ஏக்கர் காணிகளை அடையாளங் காட்டினேன். அது ரிஷாட் பதியுதீன் அமைச்ச ராக இருந்த காலத்தில் அவரின் கோரிக்கைக்கு அமைய ஒரு கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

நான் விசார்ரித்துப் பார்த்து அப்படியல்ல, குத்தகைக்கு எடுப்பதாக இருந்த கம்பனி கூறப்பட்ட பூர்வாங்க நடவடிக்கைகளில் இறங்காமையால் இரண்டு வருடங்கள் சென்ற நிலையில் காணியைத் திரும்பப் பெறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை அவருக்கு எடுத்துரைத்தேன். இது பற்றிய காணி ஆணையாளரின் கடிதமும் கையளிக கப்பட்டது. அப்படியிருந்தும் அன்று காலை அமைச்சர் கூட்டத்திற்கு முன்னர் அவர் என்னைச் சந்தித்து அவ்விடம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

எந்தவித குத்தகையும் கைச்சாத்திடப்படவில்லை என்று கூறினேன். அதை அவர் ஏற்கவில்லை. பின்னர் கூட்டத்தில் அவரின் கூற்றின் போது பதில் அளிக்கையில் எம்மைப் பயப்படுத்திக் காரியம் சாதிக்கப் பார்க்கின்றார் அமைச்சர் என்று கூறி வடமாகாணத்திற்கு எப்படி என்றாலும் பொருளாதார மையத்தைத் தர வேண்டும் என்று கூறி நிபுணர்கள் கூடாது என்று கூறியிருப்பினும் கட்டாயத்தின பேரில் வேண்டுமானால் தாண்டிக் குளத்தில் அமையுங்கள் என்றேன். முழு அமைச்சர் குழாமிற்குங் கேட்கும் படியாக பொருளாதார மையம் வடமாகாணத்திற்கு அவசியம் என்பதை எல்லோரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றேன்.

மத்திய அமைச்சர் மதவாச்சிக்குக் கொண்டு போக ஆவணம் சமர்ப்பித்துள்ளார் என்பதை அமைச்சர் ரிஷாட் அறிந்து கூட மதவாச்சிக்கு எடுத்துச் செல்லும் ஹரிசனை விமர்சிக்காமல் தாண்டிக்குளத்திற்கு எடுத்துச் செல்ல முதலமைச்சர் இணங்கியுள்ளார் என்று ஜனாதிபதிக்குக் கூறினார். தாண்டிக் குளத்தில் அமைக்கத் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார். ஜனாதிபதியோ சிரித்துக் கொண்டு இல்லை! இதை பிரதம மந்திரியுடன் பேசி சுமூகமான ஒரு முடிவுக்கு வாருங்கள் என்றார்.

அமைச்சர் ரிஷாட்டுக்கு தாண்டிக்குளத்தில் அமைப்பதால் எமக்கு ஏற்படப் போகும் பாதிப்புக்கள் பெரிதாகப்படவில்லை. விவசாயக் கல்லூரி, விவசாய நிலம், விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள் பெரிதாகப்படவில்லை.

ஆகவே தமிழ் மக்களுக்கு வரவேண்டிய, வரக்கூடிய பல திட்ட அமைவுகளையும் சூறையாட நடவடிக்கைகள் திரை மறைவுகளில் நடக்கின்றன என்பதை உங்கள் கூட்டத்தை மையமாக வைத்து இங்கு வெளிப்படுத்துகின்றேன் என முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9)

## ரயில் மோதி...

நேற்று இரவு 7.30 மணியளவில் கொடிகாமம் ராம கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கெற்பேலி கொடிகாமத்தினைச் சேர்ந்த செல்வரட்டணம் புனிதா (வயது 21) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவி தற்கொலை செய்யும் நோக்கத்துடனேயே ரயில் முன் பாய்ந்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். மேலும் உயிரிழந்த மாணவியின் அருகில் இருந்து கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டதாக தெரியவருகின்றது.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9,85,89,283)

## 201.3 ஏக்கர்...

கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் காங்கேசன்துறை ரயில் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தற்போது கட்டுவன் ஜே/238 கிராமசேவகர் பிரிவு மற்றும் குரும்பசிட்டி ஜே/242 கிராமசேவகர் பிரிவுஉட்பட்ட 126 ஏக்கரும், வறுத்தளைவிளான் ஜே/241 கிராம சேவகர் பிரிவில் 12 ஏக்கரும், காங்கேசன் துறைஜே/234 கிராமசேவகர் பிரிவில் 63.3ஏக்கர் காணியும் விடுவிக்கப்படவுள்ளது. (செ-9)

## வடிரக வாகனம்...

தாவடி வடக்கு கொக்குவிலைச் சேர்ந்த, யாழ்.மத்திய கல்லூரியில் உயர் தரத்தில் கல்வி கற்கும் தேவராஜ் நிறோஜ் (வயது 19) என்ற மாணவனே இதில் உயிரிழந்தவராவார்.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு அருகில் அமைந்துள்ள உணவகத்திற்கு சென்று விட்டு பாடசாலை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த மாணவனை பின்னால் சென்ற வடிரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியுள்ளது.

இதன் போது படுகாயங்களுக்கு உள்ளான மாணவன் அங்கு நின்றிருந்தவர்களால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நண்பகல் 12 மணியளவில் மாணவன் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரஸ்தாப மாணவருக்கு யாழ்.மத்திய கல்லூரி உயர் தர வகுப்பில் கல்வி கற்பதற்கு அண்மையில் அனுமதி கிடைக்கப் பெற்ற நிலையில் நேற்று முதற்தடவையாக அவர் பாடசாலை நோக்கி பயணித்திருந்த வேளை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. (செ-5.30)


## மரண அறிவித்தல்



### பிரகாஸ் தவச்செல்வி

கரணவாய் மேற்கு; வல்லிகாவத்தை கரவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாஸ் தவச்செல்வி 2016.06.23 நேற்று. காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரவெட்டியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடலானது தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கரவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(சி-5011)

## நினைவுகளுடன் 90-ம் நாள்



மலர்வு 27.11.1948

உதிர்வு 27.03.2016

அமரர்
### அம்பலவாணர் சிவலோகநாதன்

அணையாத தீயினில் அலையாத சுவாலையாய்
தொண்ணூறு நாட்கள் ஆகியும் அனல் கக்கி எரியுதய்யா
எங்கள் அப்பாவே உங்கள் நினைவுகள்
அன்பின் அடையாளமே அரவணைப்பின் உதாரணமே
பண்பின் திருவுருவமே பாசத்தின் இலக்கணமே
நேசத்தின் பிறப்பிடமே நிறைந்திட்ட குல விளக்கே
நீர் மறைந்து போன நாளன்று உறைந்துதான் போனோம்
இன்றும் உடைந்துதான் போனோம் உருக்குலைந்து மாய்கின்றோம்

நாட்கள் தொண்ணூறு ஆகி வந்திட்ட போதிலும்
நம்ப மறக்கின்றது எங்கள் மனங்கள்
உம் நல்ல முகம் மறைந்தது என்று சொல்ல முடியவில்லை
எம் சோகத்தை மெல்ல முடியவில்லை

உம் நினைவுகள் ஓங்கி ஒலிக்கின்றது
உம் குரல் எம் காதுகளில் விழுகின்றதே
எம் நெஞ்சம் வலிகின்றது எம்மை வாட்டுகின்றது
வேதனை கனத்த இதயத்தோடு
உம் தொண்ணூறு நாட்களை கண்ணீர்
அஞ்சலி காணிக்கை ஆக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5028)

சூராவத்தை,
சுன்னாகம்.

இங்ஙனம்
- குடும்பத்தினர்

**நடமாடும் மிருக வைத்திய சேவை**

தாவடிக்கு அண்மையில் நடமாடும் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு

Dr.K. கிருபாகரன் - 077 973 8802 / 021 224 2502

காலை : 9 - 12

446, நாவலர் வீதி, நல்லூர்.


## சி.எஸ்.டி முன்பள்ளிகளை விட்டு...

தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையால் மேற்படி தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உட்பட வன்னி மாவட்டங்களில் சி.எஸ்.டி. என அழைக்கப்படும் இராணுவ அணியை சேர்ந்த படையினரால் சிறுவர் பாடசாலைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த சிறுவர் பாடசாலைகளில் பதினெட்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிறார்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.

இலங்கை உட்பட உலகில் எந்த நாட்டிலுமே சிறுவர் பாடசாலைகளை இராணுவம் நடத்தியதாக வரலாற்று சான்றுகள் இல்லை. எனவே எமது குழந்தைகள் தாய் மொழியை சரியான முறையில் கற்கவும் தமிழர் பண்பாட்டு சமய விழுமியங்களை சிறு பராயத்திலிருந்தே கற்றுக்கொள்ளவும்,

இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுபட்டு சிறார்கள் சுயமாக பழகவும், ஆசிரியர்கள் சுயமாக கற்பிக்கவும் மாகாணசபை முழுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நிறைவேற்றப்படும் இந்த தீர்மானத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அறிவித்து உடனடியாக இராணுவ கட்டமைப்புக் குள்ளிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த சபை கோருகின்றது என்றவாறாக தனது பிரேரணையை அவர் முனமொழிந்தார்.

இந்த பிரேரணை சபை உறுப்பினர்களால் ஏற்றுக்கொளப்பட்டு அதனை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் அனுப்பி வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது இந்த முன்பள்ளிகளை வடக்கு மாகாண சபை பொறுப்பு எடுக்காமல் அதற்குள் கை வைப்பது தவறு.

இதனை நம்பி பல ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர்

இதனை உடனடியாக நிறுத்துவது ஆசிரியர்களின வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயலாகும்.

முன்பள்ளிகளை இராணுவம் நடத்துகின்ற போதிலும் அவர்கள் எந்த குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை.

இங்கு தான் எம்மவர்கள் கற்பிக்கின்றார்கள் குற்றச்செயலகளும் இடம்பெறுகின்றது.

ஆனால் இராணுவம் அவ்வாறு ஒன்றும் செய்யவில்லை என உறுப்பினர் அரியரத்தினம் குறித்த பிரேரணையின் போது கருத்து கூறியிருந்தார். (செ-4)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**நீங்கள் தொழில் தேடுபவரா?**
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் Business & Hotel Management — UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch — அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY — Business · Hospitality · English — SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798

(C-5000) 275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

**FRENCH LANGUAGE CENTRE**
FALC "FOR THE BEST FRENCH FOREVER"
**FRENCH CLASSES**
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
(C-4975)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 — ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 — ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

**பொருளியல் கருத்தரங்கு**
க.பொ.த. உயர்தரம்
எதிர்பார்க்கை விடயங்கள்
புள்ளித்திட்ட முறை
ஆரம்பம் : 26.06.2016 ஞாயிறு 1.00 மணி
ஆசிரியர்
திரு. S. ஜெயகுமார்
(B.A(Hons) Eco Spl, MA (Econ), PGDE)
இடம் : D.C.M யாழ் நகர்
தொடர்புகளுக்கு
0777 238 597 / 077 9565 245
வெளி மாணவர்களும் பங்குபற்றமுடியும்
(சி-5006)

**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்
(C-5010)

**யா/ மஹாஜனக் கல்லூரி**
தெல்லிப்பழை
நிறுவியவர் நினைவு நாள் மற்றும் பரிசளிப்பு விழாவும்
24.06.2016
நேரம் - பிற்பகல் 01.30
இடம் - பாவலர் துரையப்பாப்பிள்ளை அரங்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்.
(சி-4999)

**2016 ம் ஆண்டிற்கான விண்ணப்பம் கோரல்**
ACCA (Association of Chartered Certified Accountants)
(சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சம்மேளனத்தின் பரீட்சை)
இக் கற்கை நெறி மூன்று நிலைகளை கொண்டது
A/L பூர்த்தி செய்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இக்கற்கை நெறியினை தொடர முடியும்

ACCA - 03 கட்டாய பாடங்களையும் 02 தெரிவுப் பாடங்களையும் கொண்டது (12 மாத காலம்)
Degree Level – 06 பாடங்களை கொண்டது (12 மாத காலம்)
Diploma Level – 03 பாடங்களை கொண்டது (06 மாத காலம்)
ACCA / DEGREE / DIPLOMA

விண்ணப்ப முடிவுத்திகதி - 26th June 2016
மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு ரூ 40,000
(Registration & Subscription Fee)
வரையிலான கட்டண சலுகை வழங்கப்படும்.

AAT, மாணவர்களுக்கு பாட விலக்களிப்பு மற்றும் அதற்குரிய கட்டணச் சலுகையும் வழங்கப்படும்.

149 2/1 K.K.S Road, Jaffna. 077372 2104
K-AIMS BUSINESS SCHOOL
(C-4992)

**BA, BCom, BBA, BSc**
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான (வைகாசி (may) 2017 பரீட்சைக்கான) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L ல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் முழுமைச்சித்தி அடைந்தவர்களும் **இரண்டு பாடம்** சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- BA - ல் வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொருளியல், தமிழ், ஆங்கிலம், சமூக விஞ்ஞானம், பொது நிர்வாகம், JOURNALISM & MASS COMMUNICATON ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.
- பதிவுகளும் பரீட்சைகளும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப்பாளர் ஆகிய புதிய உயர் கல்லூரியில் நடைபெறுகின்றன.
- மேற்குறிப்பிட்ட பட்டநெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
- பொது நிர்வாகப் பாடமானது அரச ஊழியருக்கான சிறந்த தெரிவாகும்.

குறிப்பு :-
1. MA, MCom, MSc, MBA க்கான பதிவுகளும் நடைபெறுகின்றன.
2. மேற்குறிப்பிட்ட பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

கவனிக்குக :- விரிவுரைகளில் பங்கேற்கும் வெளி மாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்

காமராசர் பல்கலைக்கழகம் யாழ் இணைப்பாளர்
021 222 8148 077 846 9721
021 568 9477 077 314 4762
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-4993)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.